
கொலம்பியா
புதிய வெளியீடு
கான ஸரஸ்வதி
D.K.பட்டம்மாள்
GE.6325
கண்ணன் மதுர இதழை
தெள்ளத்தெளிந்ததய்யா
சங்கீத வித்வான்
துரையூர்
ராஜகோபாலசர்மா
GE.6369
திருவடிநம்பிவந்தேன்
(2 பாகங்கள்)
P.L.ஸரஸ்வதி தேவி
GE.6362
கருணகரி
(2 பாகங்கள்)
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.2

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 47 — 1947 ஜூன் 22 — சர்வஜித்து ஆனி 8

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

ஹைதராபாத் சமஸ்தானம் இருக்கும் இடத்தை நேயர்கள் பூகோளப் படத்தில் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறோம். இதுவரை பார்த்திராவிட்டால், இப்போதாவது ஒரு முறை பார்க்கும்படியாக வேண்டிக் கொள்கிறோம். அது சின்னஞ் சிறிய சமஸ்தானம் அல்ல; ஏறக்குறைய சென்னை மாகாணத்தின் முக்கால் பகுதியை அடைத்துக் கொண்டிருக்கிறது. அவ்வளவு பெரிய சமஸ்தானத்துக்கு, ஸர் மிர்ஸா இஸ்மயில் கொஞ்ச காலத்துக்கு முன்பு திவானாகப் போனார். ஏறக்குறைய ஒரு வருஷகாலம் வரை அங்கே திவான் உத்தியோகமும் பார்த்தார். திடீரென்று ஒருநாள் அவர் தம்முடைய பதவியை ராஜிநாமாச் செய்து விட்டதாகச் செய்தி வந்ததும் தேசம் முழுவதும் திடுக்கிட்டது.



அவ்வளவு சீரும் சிறப்பும் செல்வாக்கும், மிகுந்த சமஸ்தானத்தின் திவான் உத்தியோகத்தை ஸர் மிர்ஸா ராஜிநாமாச் செய்ததற்குக் காரணம் என்ன?

ஹைதராபாத் சமஸ்தானம் அரசியல் நிர்ணய சபையில் சேராமல் இன்னொரு குட்டி பாகிஸ்தானாக இருக்க வேண்டும் என்று நிஜாம் சொன்னார். இந்திய ஐக்கியத்துக்காக இத்தனை வருஷ காலம் பாடுபட்டு வந்த ஸர் மிர்ஸாவுக்கு இது பிடிக்குமா? எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். நிஜாம் இணங்காமற் போகவே, கடைசியில் தமது பதவியையே ராஜிநாமாச் செய்து விட்டார்.

சுதந்திரம் என்ற பெயரால் தேசத்தை இன்னும் பல துண்டாக்க ஸர் ஸி.பி. போன்ற சில திவான்கள் முயற்சி செய்து கொண்டிருக்கும்போது, ஸர் மிர்ஸா இஸ்மயில் ஐக்கிய இந்தியா என்ற உன்னதமான இலட்சியத்துக்காகத் தம்முடைய பதவியை ராஜிநாமாச் செய்தது, இந்திய தேசிய சரித்திரத்தில் என்றும் அழியாப் புகழ்பெற்று விளங்கும்.

ஸர் மிர்ஸா பெரிய ராஜதந்திரி. புகழ்பெற்ற நிர்வாகி. சிறந்த தேச சேவகர். நெடுங்காலம் மைசூரின் திவானாக இருந்தார். இன்று மைசூர் செல்வ வளமும் தொழில் வளமும் கொழித்து விளங்குவதற்கு அவர் செய்த தொண்டு கொஞ்ச நஞ்சம் அல்ல. மைசூரை ஓர் பிருந்தாவனமாகவும் ஜோதி மயமாகவும் சௌந்தரிய பூமியாகவும் செய்த பெருமை ஸர் மிர்ஸாவையே சார்ந்ததாகும்.

• • •

புகழ்பெற்ற மிதவாத அரசியல் பிரமுகராகிய ஸர் சாப்ரு ஸர் மிர்ஸாவைப் பற்றிக் குறிப்பிடும்போது, "ஸர் மிர்ஸா இஸ்மயிலைப் போல இன்னும் சிலர் இருந்தால் இந்த தேசத்தின் எதிர்காலமே ரொம்ப மாறிவிடும்" என்பதாகச் சொல்லியிருக்கிறார். சாப்ருவின் கூற்று சிறிதும் மிகையல்ல என்பதை ஸர் மிர்ஸா இஸ்மயிலின் கடைசித் தியாகம் நன்கு நிரூபிக்கிறது.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 47

என்ன சேதி?

அவசரம் எதற்கு?

சபாஷ், அவுங்சான்!—எங்கே, இப்படிக் கொடுங்கள் உங்கள் கையை! பேஷ், அப்படித்தான் செய்யவேண்டும்; அதுவே சரி! எல்லோரையும் நம்பி நம்பி இந்த இந்தியர்கள் கெட்டுப் போகிறார்கள். அப்படிக் கெட்டுப் போகாமலிருப்பதற்காக நீங்கள் ஒரு நல்ல பாடம் கற்பித்துக் கொடுத்திருக்கிறீர்கள். பலே, பேஷ்! உங்களுக்கு ஜே! உங்கள் பாஸிஸ எதிர்ப்பு வீருக்கு ஜே!

பர்மாவிலே இடைக்கால சர்க்கார் ஏற்பட்டபோது, நாம் ரொம்ப ரொம்பக் குதூகலப்பட்டோம். அந்த நாடு சுதந்தரமடையப் போகிறது என்பதை அறிந்து இன்னும் ரொம்பக் குதூகலப்பட்டோம். பர்மாவுக்கு நம்மாலான ஒத்தாசை யெல்லாம் செய்வதாகவும் மகிழ்ச்சியுடன் சொன்னோம். ஜெனரல் அவுங்சான் இந்தியாவுக்கு வந்தபோது, இந்தியர்கள் அவரை எவ்வளவோ மரியாதையாக வரவேற்று, அவர் கையோடு கைகுலுக்கி, தோளோடு தோள் சேர்த்து, “நாம் இருவரும் சகோதரர்கள் அல்லவா? உங்கள் நாட்டுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கடன் கொடுக்கிறோம்” என்று சொன்னோம். ஜெனரல் அவுங்சான் எல்லாவற்றுக்கும் தலையை யாட்டிவிட்டு, எல்லோருடனும் சிரித்துச் சல்லாபித்து விட்டு, பர்மாவுக்குப் போய் முதல் முதலாக ஒரு பெரிய பட்டை நாமத்தை இந்தியாவுக்குப் போட்டிருக்கிறார். பேர்வழி பலே ஆள் என்பதில் கொஞ்சங்கூடச் சந்தேகமே இல்லை!

குடியேற்ற அவசரச் சட்டம் என்பதாக பர்மிய சர்க்கார் ஒரு புதிய சட்டத்தை இப்போது நிறைவேற்றியிருக்கிறது. இதன்படி, பர்மா சர்க்காரிடமாவது அல்லது பர்மா சர்க்கார் சார்பில் வேறு யாரிடமிருந்தாவது பாஸ்போர்ட் வாங்கினால்தான் இனிமேல் பர்மாவுக்குள் காலடி எடுத்து வைக்கமுடியும்.

இது இந்தியரை ரொம்பவும் பாதிக்கக் கூடியதாகும்.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு, பர்மிய சர்க்கார் அதை இந்திய சர்க்காரிடம் காட்டவில்லை; அதைப் பற்றி விவாதிக்கவும் இல்லை. கலந்து பேசியிருந்தால் நேசப்பான்மையான முறையில் சமரசம் செய்து கொண்டிருக்கலாம். அதை விட்டு அவசர அவசரமாகத் தங்கள் இஷ்டம் போல சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். இது ராஜதந்திர முறைக்கே விரோதமாகும். ஒரு விரோதி நாடுதான் இந்த மாதிரி அவசரப்பட்டுச் செய்யும். இந்திய சர்க்கார் இதை அழுத்தமாகக் கண்டித்து, பர்மாவுக்கு ஓர் ஆட்சேபத்தை அனுப்பியிருக்கிறது.

தனிச் சலுகையா?

பாதகம் இல்லை! பர்மாவில் இந்தியர்கள் குடியேறக் கூடாதென்றால் குடியேறாமலேயே இருந்துவிட்டுப் போகிறோம். ஆனால், பர்மாவில் குடியேறும் இந்தியர்களைத் தடுக்கும் பர்மிய சர்க்கார், மற்ற நாட்டார்கள் குடியேறுவதையும் அந்த மாதிரியாகத்தானே தடுக்க வேண்டும்! இல்லவே இல்லை! பிரிட்டிஷ்காரர்களுக்கு மாத்திரம் இந்த அவசர சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மாத்திரம் தாராளமாகப் பர்மாவுக்குள் போகலாமாம், வரலாமாம்! என்ன விநோதம்!

நூற்றைம்பது வருஷ காலமாகத் தங்களை அடிமைப் படுத்தித் தங்கள் நாட்டைச் சுரண்டி வந்த அந்நிய மக்களுக்கு மாத்திரம் தனிச் சலுகை; அதன் சுக க்ஷேமத்தில் அக்கறை காட்டும் சகோதர தேசத்துக்கு இத்தனை அவமரியாதை! எப்படி இருக்கிறது விஷயம்!

காதில் விழுமா?

இந்தியாவிலே ருஷ்யாவின் செல்வாக்கு அதிகமாகிக் கொண்டு வருவதாக அமெரிக்கா ரொம்பப் பயப்படுகிறது.

நேருவின் காரியதரிசி ஒரு ருஷ்யப் பொதுவுடைமைக்காரராம்! ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக ருஷ்யர்கள் இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கிறார்களாம்!

"காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்" அல்லவா?

இந்தியாவிலே ருஷ்யாவின் செல்வாக்கு இருக்கிறதோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால், அமெரிக்காவின் செல்வாக்கு இந்தியாவில் பரவ வேண்டுமானால் அதற்கு வழி என்னவென்பதை மாத்திரம் அமெரிக்காவுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம்.

அமெரிக்கா இந்தியாவுக்கு என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாரா யிருப்பதாக தினந்தோறும் சொல்லுகிறது. ஆனால், இதுவரையிலும் உருப்படியாக எதையும் செய்ததாகக் காணோம். இந்த வருஷம் அமெரிக்காவிலே விளைந்திருக்கும் அளவு கோதுமை இதற்கு முன்பு ஒரு வருஷங்கூட அங்கு விளைந்ததில்லையாம். பஞ்சத்தாலும் பட்டினியாலும் தவித்துக் கொண்டிருக்கும் இந்திய மக்களுக்கு, அந்த கோதுமையில் ஒரு பகுதியை அமெரிக்கா விரைவில் அனுப்பி இந்திய மக்களின் கஷ்டத்தைப் போக்கினால், இந்தியா அமெரிக்காவை என்றென்றும் மறவாது; இந்தியாவில் அமெரிக்காவின் செல்வாக்கும் நிலைத்து நிற்கும்.

ஏராளமாகக் கோதுமையைத் தின்று கொழுத்துப் போய், காது மந்தமாக இருக்கும் அமெரிக்காவின் காதில் இது விழுமா?

நல்ல காலம்!

போக்கு வரத்துக் கஷ்டத்தைப் போக்குவதற்காக, நம்முடைய இடைக்கால சர்க்காரும் சென்னை மாகாண சர்க்காரும் பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் தங்களால் இயன்றதை யெல்லாம் செய்து வருவது பாராட்டத் தக்க விஷயமாகும்.

இடைக்கால சர்க்கார் ரயில்வே மந்திரி டாக்டர் ஜான் மத்தாய் ரயில்வேக் கட்டணத்தை உயர்த்தியபோது, மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு அதிகமான சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படும் என்பதாகச் சொல்லி யிருந்தார். அந்த "அதிகமான சௌகரியங்"கள் என்னென்னவென்பதைக் கண்ணாலே காணப் பலர் ஆவலாக இருந்தார்கள். கடைசியில், அது வெள்ளி ரயிலாக உருவெடுத்து வந்திருக்கிறது. பரவாயில்லை, இத்தனை நாள் வரை கஷ்டப்பட்ட மூன்றாம் வகுப்புப் பிரயாணிக்கு அது எவ்வளவோ ஆறுதலா யிருக்கும். ஆனால், இம்மாதிரியான ரயில்கள் கண்காட்சிப் பொருள்களாக இராமல் விரைவில் தேசமெங்கும் ஓடினால்தான், ரயில் பிரயாணத்தைப் பற்றிய பீதியும் பயமும் மக்கள் மனதிலிருந்து நீங்கும்.

அதிகம் வேண்டும்

ரயில் பிரயாண விஷயம் அப்படி யிருக்கும்போது, பஸ் பிரயாணத்தைப் பொறுத்த வரையில் விரைவிலேயே நமக்கு நல்ல காலம் பிறக்குமென்று தோன்றுகிறது. இந்த வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதிக்குள் சென்னை நகரத்திலுள்ள எல்லா பஸ்களையும் சர்க்காரே எடுத்து நடத்தப் போவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். இது ரொம்பவும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தியாகும். இப்போது பரீட்சார்த்தமாக அவர்கள் சில பஸ்களை நடத்தும் முறை எல்லோருக்கும் திருப்தியளித்திருக்கிறது. இந்த மாதிரியே எல்லா பஸ்களையும் அவர்கள் நடத்துவார்களானால், விரைவில் பொது மக்களின் பாராட்டுதலுக்குப் பாத்திரமாவார்கள்.

பஸ் போக்குவரத்தைப் பற்றிச் சொல்லும்போது நாம் இன்னொரு விஷயத்தையும் சர்க்காருக்குச் சொல்ல விரும்புகிறோம்.

தற்போதைய சென்னை ஜனத் தொகையைப் பார்க்கும்போது, இப்போதுள்ள பஸ்கள் மிகக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். மௌண்ட் ரோடிலோ, சென்ட்ரலிலோ இறங்கிவிட்டால், அப்புறம் மறு பஸ்ஸைப் பிடிப்பதென்பது சாமான்யமான காரியமாக இல்லை. நடுக் கடலில் அகப்பட்டுக்கொண்டு கப்பலுக்காகத் தவிப்பது போலத் திண்டாட வேண்டியதாக இருக்கிறது. போதிய பஸ்கள் இல்லாமையால், காலை வேளையில் காலா காலத்தில் ஆபீஸ் போகவோ திரும்பி வரவோ முடியாமல் பலர் கஷ்டப்படுவது சகஜமா யிருக்கிறது. இந்தக் கஷ்டத்தை யெல்லாம் போக்குவதற்கு சர்க்கார் அதிகப்படியான பஸ்களை விட வேண்டியது ரொம்ப ரொம்ப அவசியமாகும்.



நாளது ஜூலை மீ 15உ தமிழ்நாட்டின் வட எல்லையில் உள்ள பிரபல க்ஷேத்திரமான திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதி ஸ்வாமி சந்நிதி ஹரிஜனங்கள் உள்பட சகல ஜனங்களுக்கும் திறந்து விடப்பட்டது. அச்சமயம் பிரதம மந்திரி ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், மாஜி மந்திரி ஸ்ரீ வி. ஐ. முனிசாமிப் பிள்ளை, சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை முதலிய பிரமுகர்கள் விஜயம் செய்து விழாவைச் சிறப்பித்தனர்.

முகூர்த்த வேளை!



ஆகஸ்ட்
15
காங்கிரஸ்
பாகிஸ்தான்
லீக்
புரோகிதர் மவுண்ட் பேட்டன்:-
''சீக்கிரம்! சீக்கிரம்! முகூர்த்த
வேளை நெருங்கி விட்டது!''
SHASTRY

ஜயமா? அபஜயமா?


அடைந்திருக்கும் பாகிஸ்தான் சாம்ராஜ்யம் சுபிட்சமாயிருக்குமா.
வறுமையில் வாடுமா என்று சர்ச்சை நடந்து வருகிறது.
அடாடா! இந்த அழகான பாகிஸ்தானுக்குத்தானா இவ்வளவு பாடுபட்டோம்?

கைவிடாதீர்கள்!

வியாதி என்று ஒன்று இல்லாமலே இருந்தால் எவ்வளவோ நல்லது தான். ஆனால், அவ்விதம் இல்லாமல் இருக்கிறதா?

மனித வர்க்கத்தைப் புதிது புதிதாக எத்தனை வகை நோய்கள் பிடித்து ஆட்டி வருகின்றன?

அது போலவே உலக தேசங்களையும் ஆட்டி வரும் நோய்கள் பல.

அணுகுண்டு நோய், ஏதேச்சாதிகார நோய், ஏகாதிபத்திய நோய், இத்தியாதி....

மேற்படி நியதியிலிருந்து இந்தியா மட்டும் எவ்வாறு விதி விலக்காக இருக்க முடியும்?

எனவே, இந்தியாவையும் மகா கொடியதான வகுப்புவாத நோய் ஆட்கொண்டது.

அந்த நோய் காரணமாக எத்தனையோ ஆடவர்களும் பெண்களும் சிசுக்களும் பலியானார்கள். இன்றும் பலியாகி வருகின்றார்கள்.

நோய் முற்ற முற்ற மருந்தின் தன்மையும் கடுமையாக இருப்பது சகஜமல்லவா?

இந்த வகுப்பு வாத நோய் ஆறு வருஷங்களுக்கு முன் அவ்வளவாக முற்றவில்லை.

அந்த நோய் முற்றி விடாமல் இருப்பதற்காக அப்போதே ராஜாஜி ஒரு மருந்தைத் தயாரித்து அதைச் சாப்பிடச் சொன்னார்.

ஆனால், அந்த மருந்து ரொம்பவும் கசப்பான மருந்து என்று கூறி, அப்போது அதைச் சாப்பிட எல்லோரும் மறுத்து விட்டார்கள்.

அவ்வாறு மறுத்ததன் பலன் என்ன?

நம் தேச ஜனங்களின் கஷ்ட நஷ்டங்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகி விட்டன. பல விடங்களிலும் உதிர வெள்ளம் ஓடுகின்றது. அழகிய நகரங்கள் அக்னி ஜ்வாலை சூழ்ந்த நரகங்களாக மாறி வருகின்றன. மனிதர் மிருகங்களாகி விட்டனர். அன்பு ததும்ப வேண்டிய இருதயங்களில் துவேஷத் தீ பொங்கி வழிகின்றது. இவ்வாறாகத் தேசத்தின் நிலைமையே அடியோடு சீர் குலைந்து விட்டது.

எனவே, எந்தக் கசப்பான மருந்தை முன்னர் சாப்பிட மறுத்தார்களோ, அதே மருந்தை இப்போது சாப்பிட்டுத் தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

மேற்படி மருந்தைக் காங்கிரஸ் தலைவர்கள் வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டிருக்கிறார்கள்.

முஸ்லிம் லீக்கர்களோ மூக்கால் அழுது கொண்டே விழுங்கியிருக்கிறார்கள்.

சீக்கியர்களோ வென்றால், வேறு வழியின்றி, முகத்தைச் சுளித்துக் கொண்டே மருந்தை உட்கொண்டிருக்கிறார்கள்.

வியாதி முற்றி விட்டதால் இனி மருந்தை உட்கொண்டாலன்றி உயிருக்கே, — அதாவது பல வருஷங்களாகப் போராடியும் தியாகங்கள் புரிந்தும் பெற்றுள்ள சுதந்திரத்துக்கே ஆபத்து நேர்ந்து விடும் என்றே காங்கிரஸ் தலைவர்கள் பிரிவினையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

* * *

ஐக்கிய இந்தியாவுக்குப் பின்னம் ஏற்பட்டிருப்பது ஜனப் பிரதிநிதிகளான அரும் பெரும் தலைவர்களுக்கு எவ்வளவு துக்கத்தை உண்டு பண்ணியிருக்கிற தென்பது, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறியுள்ள தீர்மானத்தின் வாசகத்திலிருந்து நன்கு தெரிகிறது:

"இந்தியாவின் ஐக்கியத்துக்கு அணுவளவும் பாதகம் ஏற்படக் கூடாது என்று காங்கிரஸ் இடைவிடாது கூறி வந்திருக்கிறது. காங்கிரஸ் ஜனனமானது முதல் சென்ற அறுபது ஆண்டுகளுக்கு மேலாகச் சுதந்திர ஐக்கிய இந்தியாவுக்காகவே அரும்பாடுபட்டு வந்திருக்கிறது.

"இந்தியா ஐக்கியமாகவும் சுதந்திரத்துடனும் திகழவேண்டும் என்பதற்காகவே கோடிக் கணக்கானவர்கள் மகத்தான கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

"இந்தியாவின் சரித்திரம், பரம்பரா தர்மம், பூகோள அமைப்பு, மலைகள், சமுத்திரங்கள்

எல்லாம் இந்தியா ஒரே இந்தியாதான் என்பதையே குறிப்பிடுகின்றன.

"எனவே, மானிடராகப் பிறந்த எவரும் இந்தியாவின் உருவத்தை மாற்ற முடியாது; அதன் இறுதியான விதியை வழிமறித்து நிற்க முடியாது.

"சர்வதேச விவகாரங்களுக்கும் பொருளாதார சுபிட்சத்துக்கும் இந்தியா ஐக்கிய இந்தியாவாகத்தான் இருந்து தீரவேண்டும்.

"நமது மனத்திலும் இருதயத்திலும் பதிந்துள்ள இந்தியா மாறுதலின்றி அப்படியேதான் இருந்து வரும்.

"தற்போதைய ஆத்திரமும் வெறியும் தணிந்து, இந்தியப் பிரச்னைகளைச் சகலரும் விருப்பு வெறுப்பு இன்றி ஆராயும்போது, இந்தியா இரண்டு தேசங்கள் என்ற போலிச் சித்தாந்தம் தவிடு பொடியாகிவிடும்.

"ஆனால், தற்போதுள்ள நிலைமையில், இந்தியாவிலிருந்து சில பாகங்கள் பிரிந்து செல்லுவதை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வருத்தத்துடன் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது."

எனவே, மவுண்ட் பாட்டன் திட்டத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் எவ்வளவு மனக் கிலேசத்துடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அ. இ. கா. கமிட்டியின் மேற்படி தீர்மானத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

* * *

மற்றும் அக் கமிட்டி தேச மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளைச் சகலரும் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவில் பிரிவினை ஏற்பட்டு விட்டது என்பதற்காக யாரும் மனச் சோர்வு அடையக் கூடாது.

ஐந்தில் ஒரு மடங்கு பிரதேசம்தான் இந்தியாவிலிருந்து பிரிந்து போயிருக்கிறது. ஐந்தில் நான்கு மடங்குள்ள பிரதேசம் சுதந்திரம் பெற்றிருக்கிறது.

இந்தச் சுதந்திரத்துக்குப் பாதகம் விளைவிக்கும் விரோதிகள் விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாக இருந்து கொண்டு அவர்களை முறியடிக்க வேண்டும் என்பதும் மேற்படி தீர்மானமாகும்.

அந்த விரோதிகள் யார்?

அவர்களில் இரண்டு ரகங்கள் இருக்கின்றனர்.

ஐக்கிய இந்தியாவுடன் சேரமாட்டோம் என்றும், தனிக்காட்டு ராஜாக்களாகவே இருந்து வருவோம் என்றும் கூறிவரும் சமஸ்தானங்கள் முதல் ரகமாகும்.

இந்தச் சமஸ்தானங்களுக்குத் திருவாங்கூரும் ஹைதராபாத்தும் அக்ரஸ்தானம் வகித்து வருகின்றன.

இந்தியாவைச் சின்னாபின்னமாக்கிவிட வேண்டும் என்பதே இவைகளின் நோக்கம் என்பதற்கு ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை.

ஐக்கிய இந்தியாமீது படையெடுக்க நிஜாம் ராஜ்யத்தில் முஸ்தீப்புகள் வெகு மும்முரமாக நடைபெற்று வருகின்றன என்றும் கூறப்படுகிறது.

நிஜாம் வம்சத்தின் பழைய சரித்திரத்தையும், நிஜாம் சமஸ்தான நிர்வாக தர்பாரின் விபரீதங்களையும் அறிந்தவர்கள் மேற்படி கூற்றை வெறும் வதந்தி என்று தள்ளிவிடத் துணிய மாட்டார்கள்.

அரசியல் திட்டத்தைத் தயாரித்துக் கொள்ளும் உரிமை அந்தந்த ஜனங்களுக்குத்தான் உண்டு என்ற நியதி உலகம் முழுதும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இக் காலத்தில், இந்தியாவிலுள்ள சில சுண்டைக்காய் சமஸ்தானங்கள் மாத்திரம், ஜனங்களின் உயிரினுமினிய அந்த உரிமையை மறுத்து ஆர்ப்பாட்டம் செய்வது உலகமே சிரிக்கக் கூடிய "ஹிமாலய" கேலிக் கூத்தாக இருக்கிறது!

எனவே, ஐக்கிய இந்தியாவுக்குள் இருந்து கொண்டு, "எங்களுக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தமில்லை" என்றும், "எங்களுக்கும் ஜனங்களுக்கும் சம்பந்தமில்லை" என்றும் கூறுவோர், இந்தியாவின் விரோதிகள் மாத்திரமல்ல, தேசத் துரோகிகள் மாத்திரமல்ல, சுதந்திரத்தின் விரோதிகள், மானிடர் பிறப்புரிமையின் விரோதிகள், தர்மம், சத்தியம் இவற்றின் விரோதிகள், மனித சமுதாயத்துக்கே விரோதிகள்தான்.

* * *

அதனால்தான், எந்தச் சமஸ்தானத்துக்கும் தனித்து நிற்க உரிமை இல்லையென்பதைக் கண்டிப்பாக அறிவித்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

இந்தியாவிலிருந்து பிரிந்து நிற்கும் சமஸ்தானம் எதுவாயினும், அதன் வாழ்வு ஐந்து ஆண்டுகள்கூட நீடிக்க

முடியாது என்று டாக்டர் அம்பேத்கர் கூட எச்சரித்திருக்கிறார்.

ஆனால், காங்கிரசுக்கு எட்டிக்குப் போட்டியாக நடந்து கொள்ளுவதையே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட காயிதே ஆஜம், சமஸ்தானங்களுக்கு சுதந்திரப் பிரகடனம் செய்ய உரிமை உண்டென்று கூறி யிருப்பதைக் குறித்து வியாக்கியானம் எதுவும் தேவையில்லை.

எனினும் பரோடா, பிகானீர், பாடியாலா, மைசூர் போன்ற பெரிய சமஸ்தானங்கள் காட்டியுள்ள நல்ல வழியைத் திருவாங்கூர், ஹைதராபாத் சமஸ்தானங்களும் பின்பற்றப் போகின்றனவா? அல்லது சகுனிகளின் துர்ப்போதனைக்குச் செவி மடுத்துப் படுகுழியில் விழப் போகின்றனவா?

• • •

ஜனங்களின் உணவுக்கும் உடைக்கும் முட்டுக்கட்டை போடுவோர்தான் இரண்டாவது ரக விரோதிகள்.

இந்தியாவிலே உணவுப்பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகும் பிரதேசங்களான சிந்துவும், பாஞ்சால, வங்காளப் பகுதிகளும் பாக்கிஸ்தானுக்குட்பட்டு விடுகின்றன.

எனவே ஐக்கிய இந்தியா ஒன்று உணவுப் பொருள்களுக்கு வெளி நாடுகளின் உதவியை நாட வேண்டும், அல்லது உணவுப் பொருள் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்ள வேண்டும்.

தற்போது வெளி நாடுகளின் உதவியை நாடுவதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன.

அந் நாடுகளில் உபரியாக உணவுப் பொருள்கள் இருந்தால் அவற்றைக் கொண்டு வரக் கப்பல்கள் இல்லை. கப்பல்கள் இருந்தால் உணவுப் பொருள்கள் இல்லை. இரண்டும் இருந்தால் அவற்றை அனுப்ப அந்த நாடுகளுக்கு மனமில்லை.

இம் மூன்றில் எது இல்லாத போனாலும் பலன் ஒன்றுதான்!

இன்று இந்தியாவில் இருபது கோடி பேர்களைத் தவிர மற்றச் சகலரும் உணவுப் பஞ்சத்தினால் தவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

எனவே இந் நிலைமையில் உணவு முதலிய பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது தொழிலாளர்களின் முழு முதற் கடமையாகும்.

காந்திஜி, நேருஜி முதலிய மாபெரும் தலைவர்கள் வாழ்க்கையின் சுகசௌக்கியங்களை வெறுத்துத் துறவு பூண்டது ஏழைகளுக்காகத் தான். ஏழைகளிடம் அவர்களுக்கோ, காங்கிரசுக்கோ சிரத்தையில்லை என்று கூற எவரும் துணியமாட்டார்.

எனினும், காங்கிரஸ் தலைவர்களுக்கு இன்னும் முழு நிர்வாக அதிகாரமும் கிடைக்கவில்லை என்பதைச் சகலரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சமாளிக்க வேண்டிய பூர்வாங்கப் பிரச்னைகளே இன்னும் தீர்ந்தபாடில்லை.

அப்படியிருக்க, இந்த நெருக்கடியான சமயத்தில் தொழிலாளர்கள் தங்களுடைய சொந்தக் கஷ்டங்களைப் பிரமாதப் படுத்திக் கொண்டு, கோடிக் கணக்கான ஜனங்களுக்கும் கோடிக் கணக்கான ஜனங்களின் அபிமானத்துக்குப் பாத்திரர்களடங்கிய புனித காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கும் கஷ்டத்தைக் கொடுப்பது தேசத் துரோகமாகும்.

தொழிலாளர்களின் நிலை உயர வேண்டியது அத்தியாவசியம் என்பதை எவரும் மறுக்கவில்லை. அவர்கள் க்ஷேமமாக இருக்க வேண்டும் என்பதில் நியாய புத்தி படைத்த எவருக்கும் சிரத்தை இருக்கத்தான் செய்யும்.

எனினும், தங்களுக்கு உரிமைகள் கோரும் தொழிலாளர்கள், தாங்கள் தேசத்துக்கும் பொது ஜனங்களுக்கும் செய்யவேண்டிய கடமைகள் இருக்கின்றன என்பதையும் மறந்துவிடக் கூடாது.

பொது ஜனங்களையோ, தேசிய சர்க்காரையோ தொழிலாளர்கள் விரோதித்துக் கொள்ளுவது தங்களுடைய விரல்களால் தங்களுடைய கண்களையே குத்திக் கொள்ளுவதாகும்.

இந்தியா மகத்தான சோதனைக்கு உள்ளாகி யிருக்கும் இச் சமயத்தில், சகலரும் அற்ப அபிப்பிராய பேதங்களையும் சுயநலனையும் மறந்து ஏகோபித்து நிற்க வேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தீர்மானம் கூறுகிறது.

அதாவது, கைக்குக் கிடைத்துள்ள கண்ணினும் இனிய சுதந்திரத்தைக் கை விடாதீர்கள் என்பதுதான் அந்தத் தீர்மானத்தின் கருத்தாகும்.

வானசஞ்சாரம்

இசைத்தேனீ

ஜூன் மீ 4உ சென்னையில் ஆர். ஜானகியின் கானம் கவனத்தை இழுத்தது. சங்கராபரணம், வராளி ராகங்கள் நயமாயிருந்தன. சில இடங்களில் பல்லைக் கடித்துக் கொண்டு சிரமப்பட்டுப் பாடுவதுபோல் கேட்டது.

5உ திருச்சியில் மன்னார்குடி ராஜகோபால பிள்ளையின் முழு நேரக் கச்சேரி எதிர்பார்த்தது போல் சம்பிரதாய முறையாயிருந்தது. தேவமனோஹரி, கல்யாணி, மணிரங்கு ராகங்களும் கடைசி ராகமாலிகையும் ருசிகரமாயிருந்தன. அவைகளையும் உருப்படிகளையும் கூடியவரை இழைத்து நிறைந்துப் பாடினார். சாரீரம் இன்னும் கொஞ்சம் சௌகரியமாய் வாய்த்திருந்தால் கானத்தின் சுகமும் அதிகப்பட்டிருக்கும்.

7உ சென்னையில் ஆர். கே. வெங்கடராம சாஸ்திரியின் வயலின் முழுநேரக் கச்சேரி வெகு சுகமாய் அமைந்தது. சுருதி சுத்தமும் அழுத்தமும் கொண்டு ராகங்களும் உருப்படிகளும் நல்லபடியாய் வெளி வந்தன. பல்லவி ராகமாலிகை தோடியில் தமது முழுத் திறமையைக் காட்டினார். சுத்த பங்காளா, மலயமாருதம், ஆனந்தபைரவி ராகங்களும் நயமாயிருந்தன.

9உ காலை சென்னையிலிருந்து கேட்ட கானம் கவர்ச்சி கொடுத்தது. கனிப்பும் இனிப்பும் கொண்ட குரல். ஞான பலமும் நலவழியும் கொண்டு ஷண்முகப்பிரியா ராகம் சுகமாகக் காதை நிரப்பியது. 'நீதேறத்து வெகுதூரா' கிருதி நயமாயிருந்தது. பாடியவர் டி. எஸ். கோகிலம்.

அன்று மாலையிலும் இரவிலும் சென்னையில் மூன்று கச்சேரிகள் கேட்க வாய்த்தன. கோபாலய்யர் ராமகிருஷ்ணன் கோட்டுவின் வீணையுடன் இழைந்து வந்த பாட்டு அழகு. ராமப்ரியா, ஹரிகாம்போதி ராகங்களிலும் உருப்படிகளிலும் அவரது தேர்ச்சி நன்கு விளங்கியது.

அடுத்தாற்போல் ராஜலட்சுமி சந்தானம் மதுரமான குரலில் நலவழியும் கற்பனையும் கொண்டு நாட்டக்குறிஞ்சி, சங்கராபரண ராகங்களைச் சக்கைப் போடு போட்டார்.

• • •

இயற்கையில் சாரமாய் இழைந்துவரும் சாரீரத்துடன், அரிய சாதகமும், கற்பனைப் பொழிவும், இளமைப் பருவமும் சேர்ந்து விட்டால் அந்தப் பாட்டு எப்படியிருக்கும்! ஜூன் மாதம் 10உ சென்னையிலிருந்து கேட்ட என்னப்பாடம் ராமச்சந்திரனின் கச்சேரி அத்தகையது. கல்யாணி ராகத்திலும் 'தந்தருள ஐயா' என்ற நாணிகாபூடி கிருதியிலும் மேற்குறித்த அம்சங்கள் நிறைந்திருந்தன.

கேட்போரின் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பும் பாவப்பொழிவுடன் பாடும் மிகச் சிலரில் எம். டி. பார்த்தசாரதி ஒருவர். அவர் தம் பாரி சாரீரத்தை அடக்கி விடும்போது உணர்ச்சியுடன் சுகபாவமும் கலந்து சோபிக்கின்றது. ஜூன் 11உ சென்னையில் அவர் தோடியை ராகம் தானம் பல்லவிக் கச்சேரிக்காக எடுத்து விளக்கியதே அதற்குச் சான்றாகும்.

12உ திருச்சியில் வயலின் கச்சேரி செய்த கரூர் சின்னசாமி ஐயர் பழம்பெரும் வித்வான். வித்வான் சம்பிரதாய முறையில், கேதாரம், பைரவி, கல்யாணி ராகங்களை வழங்கினார்.

அதே நிலையத்திலிருந்து கேட்ட பி. எஸ். லக்ஷ்மியின் கானத்தில், காபி ருசிகரமாயிருந்தது.

சென்னையில் நடந்த மேலக்காவேரி வரதராஜய்யங்காரின் கச்சேரியும் குறிப்பிடத்தக்கது. கேதாரகௌளை, சாவேரி ராகங்கள் ஞானபலம் ததும்பியிருந்தன.

13உ சென்னையில் எஸ். நாணியம்மாளின் தோடி ராகம் சிறப்பாகக் கேட்டது.

14உ சென்னையில் நடந்த எஸ். வி. பார்த்தசாரதியின் கச்சேரி முதல்தரம். காம்போதி நிதானமாய் உருவாகி வந்தது. நாட்டக்குறிஞ்சி வனப்பு மிகுந்து இலங்கியது. உருப்படிகளும் ஸ்வரப்ரஸ்தாரங்களும் பிரமாதமாயிருந்தன.

15உ இரண்டு நிலையங்களிலும் கச்சேரிகள் நன்றாய் அமைந்தன. திருச்சியிலிருந்து, மூவலூர் எஸ். செல்லப்பா, பி. வை. லலிதாபாய் இவர்களின் கானங்கள் கவனத்தை இழுத்தன. முன்னவரது சாவேரி, சங்கராபரண ராகங்கள் ஞானபலம் நிறைந்த நடைவங்களை வீசியழுந்தன. பின்னவர் அனுபவ உறுதிப்பாடும் கற்பனைச் சிறப்பும் கொண்டு தோடி, கல்யாணி, தர்பார் ராகங்களைத் நயம்பட வழங்கினார்.


சென்னையில் ஒரு மணி நேரக் கச்சேரி செய்த எம். நீலகண்டய்யர் ஞானச் சிறப்பும் நல்வழியும் கொண்டவர். அன்று அவர் இசைத்த கல்யாணிக்கு முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும்.


திருச்சியில் நடந்த டி. வி. நமசிவாயத்தின் கச்சேரியில் லதாங்கி, பூர்வீகல்யாணி ராகங்கள் குறிப்பிடத்தக்கவை.

16உ திருச்சியில் டி. வைத்தியநாதய்யர் சாரங்கா, முகாரி ராகங்களை வளமாய் வழங்கினார். இக்காலத்தில் அதிகம் கேட்காத 'காருபாருசேயவாரு' என்ற முகாரி கிருதியை அவர் எடுத்து விளக்கியது வாசமும்.

நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி





பாரதி மண்டபம்

"பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி" என்று கேட்டிருப்பீர்கள். அவர் பிறந்தது எட்டயபுரம் என்றும், அங்கே பாரதியின் ஞாபகார்த்தமாக ஒரு மணிமண்டபம் கட்டியாகிறதென்றும் அறிந்திருப்பீர்கள்.

மேற்படி பாரதி மண்டபம் கட்டுவதற்காகக் "கல்கி" பத்திரிகையின் மூலம் நிதி வசூலிக்கப்பட்டது. இலங்கையிலிருந்து இமயம் வரை உள்ள தமிழர்கள் போட்டி யிட்டுக் கொண்டு பணம் கொடுத்தார்கள். நிறைவென்று நிதி வசூல் நிறுத்தப்பட்டது என்று செய்தியை வெளியிட்டோம். காரியம் ஒன்றும் செய்யாமல் பாங்கியிலே பணத்தைச் சேர்த்துக் கொண்டிட போக நாம் விரும்பவில்லை. அன்றியும், வேறு பல சிறந்த இலட்சியங்களுக்காக நண்பர்கள் பலர் நிதி வசூல் தொடங்க விரும்பினார்கள். அதற்கெல்லாம் இடையூறா யிருக்கக்கூடா தென்று பாரதி மண்டப நிதி வசூலை அப்போது நிறுத்தினோம்.


இப்போது எட்டயபுரத்தில் மண்டபத் திருப்பணி முக்கால் பங்கு நிறைவேறியிருக்கிறது. பாரதியாரின் குடும்பத்துக்காக ஒதுக்கி வைத்த ரூபாய் பத்தாயிரத்தைத் தவிர பாக்கிப் பணம் ஏறக்குறைய செலவழிந்து விட்டது.

மண்டபம் பூர்த்தியடைய இன்னும் சுமார் பதினையாயிரம் ரூபாய் வேண்டும். மண்டபத்தைக் கட்டி வௌவால் குடியிருக்க விட்டுவிடலாமா? "மணிக்கொடி" ஸ்ரீ கே. சீனிவாசன் அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டது போலப் பாரதி மண்டபத்தின் சிழலில் தமிழ் தழைத்தோங்குவதற்கு ஒரு நல்ல ஸ்தாபனம் அமைக்க வேண்டும். இதற்கெல்லாம் மேலும் பணம் வேண்டும்.

மறுபடியும் பாரதி ஞாபகார்த்த நிதி வசூல் தொடங்குவதா என்னும் விஷயம் பற்றித் தீர்க்கமாக, மூன்று மாத அவகாசம் எடுத்துக் கொண்டு, திரும்பத் திரும்ப யோசனை செய்து பார்த்தோம். நண்பர்களின் அபிப்பிராயங்களையும் கேட்டோம். இந்த நல்ல சிறந்த தமிழ்த் திருப்பணிக்குப் பொருளுதவி செய்யும் சந்தர்ப்பம் இன்னொரு முறையும் தமிழர்களுக்குக் கொடுக்கத்தான் வேண்டுமென்று ஒருமுகமாக யாரைக் கேட்டாலும் சொன்னார்கள். "அப்போது அநேகருக்குக் கொடுக்கச் சௌகரியம் இல்லாமலிருந் திருக்கலாம்; அல்லது அனுப்ப உத்தேசித்திருந்தும், நிதி வசூலைச் சட்டென்று நிறுத்திவிட்டபடியால் ஏமாற்ற மடைந்திருக்கலாம்; ஆகையால் இன்னொரு தடவையும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்" என்று ஏறக்குறைய ஏகமனதான அபிப்பிராயம் நண்பர்கள் தெரிவித்தார்கள்.

அவர்களுடைய தீர்ப்பை ஒப்புக்கொண்டு மறுபடியும் பாரதி மண்டப நிதி வசூலை ஆரம்பித்திருக்கிறோம். இதை அதிக நாள் வளர்த்திக்கொண்டே போகாமல் கூடிய சீக்கிரத்தில் முடிவு செய்து விடவும் எண்ணியிருக்கிறோம்.

ஸ்ரீ சின்ன அண்ணாமலை தம் கட்டுரையில் குறிப்பிட்டதிலிருந்து, இன்று வரையில் வந்திருக்கும் நன்கொடைத் தொகைகளைக் கீழே காணலாம். நன்கொடைகளில் நமது தமிழ்ப் பிரதம மந்திரி ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் நன்கொடையையும், அகில இந்திய பத்திரிகாசிரியர் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி அவர்களின் நன்கொடையையும் பெரிதும் பாராட்டி அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம்.



பாரதி மண்டபம் — முகப்பு

ஐந்து ரூபாயும் அதற்கு மேற்பட்டு முள்ள நன்கொடைகளையே இம்முறை பிரசுரிப்

பது என்று நிர்மாணித்திருக்கிறோம். ஐந்து ரூபாய்க்குக் குறைவாகக் கொடுக்கும் அன்பர்கள் ஆங்காங்குள்ள வாசகசாலை முதலிய பொது ஸ்தாபனங்களின் பேரால் பணம் சேகரித்து மொத்தமாக அனுப்பிவிட்டால் மிகவும் சௌகரியமாயிருக்கும்.

பாரதி மண்டப நிதி

பிரதம மந்திரி ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்	101	0	0
ஸ்ரீ தேவதாஸ் காந்தி, "ஹிந்துஸ்தான் டைம்ஸ்", புதுடெல்லி	101	0	0
ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், குற்றாலம்	101	0	0
ஸ்ரீ வி. எஸ். வெங்கடாசாரியார், விட்டலாபுரம்	101	0	0
ஸ்ரீ ஆர். ராஜகோபாலசாமி நாயுடு, [illegible], டவுன் போஸ்ட், கோவை ஜில்லா	101	0	0
ஸ்ரீ கே. ஸ்ரீநிவாசன், "[illegible] ஸ்டாண்டர்ட்", பம்பாய்	100	0	0
கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, நாமக்கல்	100	0	0
ஸ்ரீ கே. ரகுநாதன், மயிலாப்பூர், சென்னை	51	0	0
கழுகுமலை நாடார் மகாஜனங்கள், கழுகுமலை	51	0	0
மணப்பாறை காங்கிரஸ் கமிட்டி, மணப்பாறை	51	0	0
ஸ்ரீ சின்ன அண்ணாமலை, தமிழ்ப் பண்ணை, சென்னை	50	0	0
ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை, சபா நாயகர், சென்னை	50	0	0
ஸ்ரீ [illegible] எஸ். மாயம்மாள், [illegible] மில், கரூர்	50	0	0
இசை அரசு ஸ்ரீ எம். எம். தண்டபாணி தேசிகர், தியாகராயநகர்	50	0	0
ஸ்ரீ சண்முகநாதன் வேலாயுதம் பிள்ளை, தங்கச்சிமடம், ராமநாதபுரம் ஜில்லா	36	0	0
ஸ்ரீ பி. தண்டபாணி, ஜெனரல் மர்ச்செண்ட், [illegible]	25	8	3
ஸ்ரீ [illegible] சுப்பிரமணியம், துணை ஆசிரியர் 'கல்கி' சென்னை	25	0	0
ஸ்ரீ ராமநாதன், அக்கௌண்டண்ட், மிட்லாண்ட் இன்ஷியூரன்ஸ் கம்பெனி, காரைக்குடி	25	0	0
ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமய்யர், ராணிப்பேட்டை	25	0	0
ஸ்ரீ பெ. [illegible] பிள்ளை, ஆசிரியர், "தமிழ் நாடு", சென்னை	25	0	0
ஸ்ரீ எஸ். கோபாலகிருஷ்ணன், கல்கி ஏஜண்ட், திருநெல்வேலி	10	0	0
[illegible] சிப்பந்திகள், [illegible]	6	4	0
ஸ்ரீ ராம. சேதுராமன் செட்டியார், [illegible]	5	0	0
ஸ்ரீ ராம. அரு. அரு. வீரப்பன், செட்டை "அரு" வீடு, தேவகோட்டை	5	0	0
	1245	12	3

மானேஜர், "கல்கி",
கீழ்ப்பாக்கம், சென்னை

தியாகராஜ யோகம்

பரம பக்தரான ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் கீர்த்தனங்களுக்கு அவர் சமாதியடைந்து நூறு வருஷத்துக்குப் பிறகு உண்மையாகவே யோகம் பிறந்திருக்கிறது. "கீர்த்தி மணி மாலை" என்ற புத்தகத்தின் முதற் பாகம் வெளியாகி விட்டது. "ஸ்ரீ கணநாதம்" என்னும் கனகாங்கி கீர்த்தனத்திலிருந்து "ஜயது ஜயது" என்னும் சத்யம் வரையில் ஸ்ரீ தியாகராஜரின் நூறு ஸாஹித்யங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. ஸ்ரீ தியாகராஜரை ஸ்தோத்திரம் செய்து ராமநாதபுரம் சீனிவாசய்யங்கார் இயற்றிய "சத்குரு ஸ்வாமிகி" என்னும் கீர்த்தனம் முதலில் தரப்பட்டிருக்கிறது. நூறு கீர்த்தனங்களுக்கும் புத்தகத்தின் ஆரம்பத்தில் தமிழில் பொழிப்புரையைக் காண்கிறோம். கீர்த்தனம் ஒவ்வொன்றும் தமிழிலும் தெலுங்கிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. அந்தந்தக் கீர்த்தனங்களுக்குரிய ஸ்வரங்கள், சங்கதி வரிசைக் கிரமத்துடனும் கீழே இரு பாஷைகளில் ஸாஹித்ய எழுத்துக்களுடனும் அச்சிடப் பட்டிருக்கின்றன. சுவாமி சுத்தானந்த பாரதியார் உணர்ச்சி ததும்பும் அருமையான தமிழ் நடையில் ஸ்ரீ தியாகராஜரின் புனித சரித்திரத்தை விரிவாக எழுதி உதவியிருக்கிறார். நூறு கீர்த்தனங்களுக்கும் உரிய ராகங்களின் லக்ஷணங்களை முன்னால் சுருக்கமாக எழுதியிருக்கிறது.

சாதாரணமாக, ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் படம் என்று ஒரு அவலட்சணமான முகத்தையும் உருவத்தையும் போட்டு வைப்பது வழக்கம். இந்தப் புத்தகத்தைத் திறந்ததும் தெய்வீகக் களை பொருந்திய ஸ்ரீ தியாகராஜரின் திவ்ய வடிவம் கண் குளிரக் காட்சி தருகின்றது. நூலாசிரியரும் வீணை தனம்மாளும் ஒரு படத்திலும், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் இன்னொரு படத்திலும் தோன்றுகிறார்கள்.

"கல்கி" பக்கத்தைக் காட்டிலும் கொஞ்சம் பெரிய அளவுள்ள சுமார் ஐந்நூறு பக்கங்கள் கொண்ட புத்தகம்.

புத்தகத்தின் மற்றப் பகுதிகளை யெல்லாம் கண்ணோட்டமாகப் பார்த்துவிட்டு, புத்தகத்தின் கடைசியில் கவனமாகப் பார்த்தோம். கண்களை நன்றாகத் திறந்து கொண்டு கடைசிப் பக்கத்தை முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்தோம். விந்தையிலும் விந்தை! "பிழை திருத்தம்" என்னும் தலைப்பும் அதன் அடியில் பக்கம் பக்கமாய்ப் பிழை திருத்தங்களும் காணப் படவில்லை!

ஐந்நூறு பக்கம் கொண்ட சங்கீத புத்தகத்தில், அதுவும் ஸ்வர ஸாஹித்யங்கள் அச்சிட்ட பக்கத்தில், அச்சுப் பிழை ஜாபிதாவே கிடையாது!!

இந்த மகத்தான பிரம்மப் பிரயத்தனமான கைங்கரியத்தை ஏற்றுக் கொண்டிருப்பவர் ஸ்ரீ ஆர். ராமானுஜ ஐயங்கார் பி.ஏ., எல்.டி. அவர்கள். ஒரு பெரிய ஸ்தாபனம் செய்யவேண்டிய கைங்கரியத்தை ஒரு தனிப்பட்ட மனிதர் துணிந்து ஏற்றுக்கொண்டு நடத்துகிறார். நாலில் ஒரு பங்கு கைங்கரியம் (அதாவது முதற் பாகம்) புத்தகமாக வெளிவந்து விட்டது.

இந்தக் காலத்துப் புத்தகங்களின் விலையுடன் ஒப்பிடும்போது, இந்த நூலுக்கு ரூ. 6—8—0 விலை வைத்திருப்பது புத்தகத்தை இனமாகக் கொடுப்பதுபோல் என்று சொல்லலாம்.

சங்கீத அபிமானிகளும் தியாகராஜ பக்தர்களும் புத்தகத்துக்கு உடனே எழுதிப் பெற்றுக் கொள்ளவும். அப்புறம் சாவகாசமாக வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்தால் ஏமாறும்படி நேரிடலாம்.

[விலாசம்: ஸ்ரீ ஆர். ராமானுஜ ஐயங்கார், பி.ஏ. எல்.டி., "சபர்மதி," எழும்பூர், சென்னை. விலை: ரூ. 6—8—0]

சங்கீத யோகம்

ஐந்தாறு வருஷத்துக்கு முன்னால் கர்நாடக சங்கீதக் கலைக்கு ஒரு புதிய யோகம் பிறந்தது. அதாவது தமிழிசை இயக்கம் ஆரம்பமாயிற்று. தமிழிசை இயக்கத்தின் மூலமாகக் கர்நாடக சங்கீதக் கலை வளம் பெறவும், மக்களிடை பரவவும் வசதிகள்

ஏற்பட்டன. ஆயினும், ஏதேதோ காரணங்களினால் சில பிரமுகர்கள் தமிழிசை இயக்கத்தை எதிர்த்தார்கள். சிலர் தமிழிசையினால் கர்நாடக சங்கீதத்துக்கு ஆபத்து வந்து விடுமோ என்று பயந்து போனார்கள். மேற்படியார்களின் எதிர்ப்புக்கும் பயத்துக்கும் அவ்வப்போது "கல்கி"யில் தக்க பதில்கள் வெளியாயின. சில சமயம் விவாதம் வெகு காரசாரமாயிற்று. எனினும், விவாதத்தின் மூலமாக உண்மை நன்கு விளக்கமாயிற்று.

"கல்கி"யில் வெளியான தமிழிசை விவாதக் கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள் எல்லாவற்றையும் சேர்த்து இந்த அழகிய புத்தகமாகத் தமிழ்ப்பண்ணையார் வெளியிட்டிருக்கின்றனர். புத்தகத்தின் அட்டை பளபள வென்று தங்க மயமாக ஜொலிக்கின்றது. உள்ளே பிரித்ததும், தமிழிசையை ஆதரித்து வளர்த்த பிரமுகர்கள், தமிழிசையில் ஈடுபட்ட சங்கீத வித்வான்கள் ஆகியவர்களின் உருவப் படங்கள் பற்பல வர்ணங்களில் கண்ணைக் கவரும் தோற்றமளிக்கின்றன.

மா முதலிய சில கனி வர்க்கங்களை மாத்திரமே பழுக்க விடுவதில்லை. செங்காயா யிருக்கும்போதே பறித்து வைக்கோலில் மூடி வைத்தால சிலநாளில் இனிய பழங்களாகி விடும். அதுபோலவே இந்த நூலில் அடங்கிய சங்கீதக் கட்டுரைகள் முன்னைக் காட்டிலும் இப்போது படிப்பதற்கு அதிக ரஸமா யிருக்கின்றன.

"கல்கி" ஆசிரியர் 15 பக்கம் கொண்ட ஒரு முன்னுரையும், ஸ்ரீ சின்ன அண்ணாமலை ஒன்பது பக்கம் கொண்ட இன்னொரு முன்னுரையும் எழுதி யிருக்கிறார்கள்.

[சங்கீத யோகம்; ஆசிரியர்: "கர்நாடகம்"; பிரசுரம்: தமிழ்ப்பண்ணை, தியாகராஜ நகர், சென்னை; விலை: ரூ. 5—0—0]

★ ● ★

:: வட்ட மேஜை ::

தியாகராயநகர்
14—6—1947

"கல்கி" ஆசிரியர், சென்னை.

பாரதியாரின் ஞாபகார்த்தமாகச் செந்தமிழ்க் கோவில் கட்டும் தங்கள் திருப்பணியைப் போற்றுகின்றேன்.

மகாத்மா காந்தி யடிகளின் ஜீவோதய தேசத்தைத் தமிழ் நாடெங்கும் பரவச் செய்வதற்குத் தனிப் பெருந் துணையாக இருந்தவை பாரதியார் அருளிய பாடல்களே. அவைகளைத் தமிழ் மக்கள் எல்லோருடைய மனத்திலும் முழங்கும்படி செய்வதற்காக இயன்றவரை முயன்று வந்த எனக்குத் தங்கள் கைங்கரியம் மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கின்றது.

பாரதி மண்டப நிதியில் நான் அனுப்பும் இந்தச் சிறு காணிக்கையையும் சேர்த்துக் கொள்ள வேண்டிக்கொள்கிறேன்.

தங்கள் அன்பன்,

பொ. திரிகூடசுந்தரம்,

(ஆசிரியர், தமிழ் "பாவேந்தன்")

தியாகராஜநகர்
13—6—1947

கல்கி ஆசிரியர், சென்னை.

அன்புடையீர் தங்களால் துவக்கப் பெற்ற புனிதமான எட்டயபுரம் பாரதி மண்டப வேலை திருப்திகரமாக நடைபெற்று வருகிறதை அறிந்து மகிழ்வெய்துகிறேன். பாரதி மண்டபம் கட்டி முடிப்பதற்கு இன்னும் நிதி தேவை என்று தங்கள் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். நல்ல காரியத்திற்கு எத்தனை தடவை கொடுப்பதற்கும் தமிழர்கள் தயங்க மாட்டார்கள். இது தமிழர்களின் பரம்பரைப் பண்பாடு. நான் முன்கூட்டியே பாரதி நிதிக்கு ரூபாய் நூறு கொடுத்திருந்தும், மறுமுறையும் பணம் தேவை என்று தெரிந்தவுடன் இத் திருப்பணிக்கு என்னுடைய "அணில் உதவி"யாக ரூபாய் ஐம்பது அனுப்பி யிருக்கிறேன்.

எம். எம். தண்டபாணி தேசிகர்.

ராஜாஜி சேவா சங்கம், வேலூர்.
19—5—47

ஆசிரியர், "கல்கி" சென்னை.

அன்புடையீர்,

நம் தலைவர் ஸ்ரீ ராஜாஜி அவர்களின் பிறந்த தினத்தைச் சிறப்புடன் ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டுமென எண்ணி இருக்கிறோம். அவருடைய பிறந்த தினம் யாதெனத் தெரியவில்லை. ஆகவே தயை செய்து அவருடைய பிறந்த தினத்தைத் தெரியப்படுத்துமாறு கோருகிறோம்.


சிரமத்திற்கு மன்னிக்கவும். எங்களுடைய முயற்சிக்குத் தங்கள் ஆதரவையும் ஆசியையும் வேண்டுகிறோம்.


எஸ். வெங்கடராமன்,

காரியதரிசி.

[சென்ற சில வருஷங்களில் மேலே யுள்ளது போன்ற கடிதங்கள் ஆயிரத்துக்கு மேலே நமக்கு வந்திருக்கின்றன. அக்கடிதங்களில் கேட்டிருக்கும் தகவலை நம்மால் கண்டு பிடித்துக் கொடுக்க முடியவில்லை. ராஜாஜி தமது பிறந்த தினத்தைச் சொல்லக் கண்டிப்பாக மறுப்பதுடன், அவருடைய உறவினருக்கும் அத்தகைய கட்டளை பிறப்பித்திருக்கிறார். இது சம்பந்தமாக இந்த இதழில் வெளியாகியிருக்கும் "ராஜாஜியின் பிறந்த தினம்" என்னும் கட்டுரையைப் படித்துப் பார்க்கும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.]


INDIA SUPER
சிவப்பு வளையமுள்ள டயர்கள்
INDIA Super CYCLE
TYRES
I



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

180. வெள்ளிமலை மீது கருமலை

'மாரீச மானைக் கொன்றதில் குறையில்லை. ஆனாலும், சாகுந்தறுவாயில் மாரீசன் கூக்குரலிட்டது சீதையின் காதில் விழுந்திருக்குமே! என்னென்ன குழப்பத்தை உண்டாக்கியிருக்கும் அந்தச் சப்தம்!' என்ற கவலையிலேயே பர்ண சாலையை நோக்கித் திரும்பி வருகிறான் ராமன்.

ராமன் பயந்தபடியே குழப்பம் உண்டாகி, லக்ஷ்மணன் சீதையை விட்டு விட்டுத் தன்னைத் தேடி வருவதைப் பார்த்துக் கொண்டான். ராமனது மனசில் என்ன வெல்லாமோ சஞ்சலம் உண்டாய் விட்டது.

தம்பியைக் கண்டு கொண்டதில் ஒரு ஆறுதல்தான். ஆனாலும் அவனிடத்தில் கருத்து சிறிதும் செல்லாதவனாய் அப்படியே ஓடி வருகிறான் பர்ணசாலைக்கு.

பர்ண சாலையைச் சுற்றியுள்ள பூஞ்சோலைகளிலிருந்து புஷ்பங்களை மாலையாகத் தொடுத்துக் கூந்தலில் சூடிக் கொண்டிருக்கும் சீதையின் அழகைத் தினந்தோறும் பார்த்தவன் ராமன்.

தான தன்னன
தானன தானன
தா ன

ஓடி வந்தனன்;
சாலையில்ச், சோலைதான்
உத வும்

தோ(டு)இ வர்ந்தபூஞ்
சுரிகுழ லாள்தனைக்
கா ணான்;—

கூடு தன்னையே
பிரிந்துள ஆருயிர்
குறி யா,

தேடி வந்தது
கண்டில தாம்என
நின் றான்.

[சோலைதான் உதவும் தோடு இவர்ந்த பூஞ்சுரி குழலாள் தனை : அங்குள்ள சோலையின் பூத்த புஷ்பங்களைக் கொய்து அலங்காரமாக அணிந்துள்ள சுருண்ட கூந்தலையுடைய சீதையை : காணான் : காணாதவனாய் ; பிரிந்துள ஆருயிர் : உடலை விட்டுப் பிரிந்து, உயிரானது எங்கெங் கெல்லாமோ போகும், மறுபடியும் அந்த உடலையே தேடி வந்து அதற்குள் புகுந்து கொள்ளும், என்பதாக ஒரு சித்தாந்தம், — அப்படிப் பிரிந்த உயிரானது ; கூடு தன்னையே குறியா தேடி வந்தது : தன் உடலைக் குறித்துத் தேடி வந்தது: ஆனால், கண்டிலதாம் : உடலைக் காணவில்லை ; (அழிந்து போய்விட்டது உடல்) அப்போது அந்த உயிரின் நிலை எப்படி யிருக்கும்? அந்த நிலையில் நின்றான் ராமன்.

குறிப்பு :—உணர்ச்சியை அபூர்வமான தெளிவோடு வெளிப்படுத்துகிறது உவமானம்.]

⁂

ஒன்றும் உணராதவனாய், ராமன் ஏதோ அங்கே போய்ப் பார்த்தான், இங்கே போய்ப் பார்த்தான். தென்படவில்லை சீதை. அப்போது தேர்த்தடம் ஒன்று இருப்பதாக லக்ஷ்மணன் சொல்லுகிறான். தேர்த்தடத்தைப் பற்றிக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடிப் போகிறார்கள் ராமலக்ஷ்மணர்கள். லக்ஷ்மணன் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டு வருகிறான். ஒன்றும் ராமன் காதில் விழுந்தபாடாக இல்லை. கடைசியாகக் காட்சி ஒன்று, ராமன் கண்ணுக்குத் தென்பட்டது. கண்ணிலிருந்து, தீப்பொறி பறக்க, விரைந்து செல்லுகிறான் அவன்.

மடலுன் நாட்டிய
தார்இளை யோன்தனை
மதி யான்;

மிடல்உன் நாட்டங்கள்
தீயுக நோக்கினன்
விரை வான்,—

[உடலுள் நாட்டிய
குருதிஅம் பரவையின்,
உம் பர்க்
கடலுள் நாட்டிய
வரைஎனத் தாதையைக்
கண் டான்.

[மடல் உள் நாட்டிய: புஷ்பங்களை உள்ளே திணித்துக் கட்டிய; தார் இளையோன் தனி மதியான்: மாலையைச் சூடிய தம்பி சொல்லுகிற வார்த்தைகள் காதில் விழாதவனும்; மிடல் உள் நாட்டங்கள்: திடமான பார்வையைக் கொண்ட கண்கள்; தீ உக நோக்கினன் விரைவான்: நெருப்புச் சிந்தும்படியாக நோக்கி முன்னேறி நடக்கிறான்; உடலுள் நாட்டிய குருதி அம் பரவையின்: உடலுள் நிறைத்து வைத்துள்ள இரத்தமானது சிந்திக் கடல்போல் பெருகி நிற்க, அதற்குள் தாதையைக் கண்டான்: ஜடாயு தோய்ந்து கிடக்கக் கண்டான்; உம்பர்க் கடலுள் நாட்டிய வரை என: தேவர்களுக்கான பாற்கடலுள் நாட்டிய மந்தர கிரியைப் போல.

குறிப்பு:—எல்லாம் எதிர்பாராதபடி நடந்த காரணத்தால் லக்ஷ்மணனது அலங்காரம் (மாலை சூடியது) அப்படியேதான் இருக்கிறது.]

***


ஜடாயுவைக் காணவும், கண்ணிலிருந்து கண்ணீர் குபு குபு என்று சொரிகிறது ராமனுக்கு.

துன்னி யோங்கிச்சொ—
ரிந்திட நயனநீர்,
சொல் லைத்
தன்னி ஓங்கிய
அமலன், தன் தனிஉயிர்த்
தந் தை
வன்னி யோன்திரு
மேனியில்த்,— தழல்நிற
வண் ணன்
வெள்ளி ஓங்கலில்,
அஞ்சன மலையென
வீழ்ந் தான்.

[சொல்லைத் தன்னி ஓங்கிய அமலன்: புகழ் வார்த்தைகளை எல்லாம் கடந்து செல்லும் குணக்குன்றாகிய ராமன்; அமலன்: யாதொரு குற்றமுமில்லாத குணவான்; தன் தனி உயிர்த்தந்தை வன்னியோன் திருமேனியில்: தன் உயிருக்கு உயிரான தந்தையாயும் வன்னனாயும் உள்ள ஜடாயுவின் மீது (ஜடாயுவினுடைய கழுத்துக்குக் கீழ்ப்பட்ட பாகம் எல்லாம் ஒரே வெண்மையாய் இருந்தது) வீழ்ந்தான்: நீலமேக வண்ணனான ராமன் வீழ்ந்தான். அது எதுபோல் இருந்தது? தழல் நிற வண்ணன் வெள்ளி ஓங்கலில்: அக்னி சொரூபமான சிவபெருமான் வீற்றிருக்கும் வெள்ளியங்கிரி மீது; அஞ்சனமலை என வீழ்ந்தான்: மைநிறமான கருமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்தான்.]

முதல் முதலில் ஜடாயு ராமலக்ஷ்மணர்களைக் கண்டபோது, "தசரதன் சௌக்கியமாய் இருக்கிறானா?" என்று கேட்டான். தந்தை காலமாய் விட்டதை ராமன் சொன்னான். சொன்ன மாத்திரத்தில் ஜடாயு உயிர்போனமாதிரி உணர்ச்சி அற்று விழுந்தான்.

பிறகு ராமன், சீதை, லக்ஷ்மணன் மூவரையும் பஞ்சவடியில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு விடைபெற்றான். அப்போதும் அவனது கவலை மிகப் பெரிதாய் இருந்தது. இப்படி எல்லாம் அன்புமயமாய் இருந்த பாத்திரம் கொலையுண்டு கிடப்பதைப் பார்த்த ராமன் பாடு எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும்! ஒரே ஓட்டமாய் ஓடி வந்து ஜடாயு மேல் விழுந்தான் ராமன்-என்று சொல்லித் துயரத்தின் வேகத்தை வெகு அழகாய்க் காட்டியிருக்கிறார் கம்பர்.





ஓவல்டின்" நோய்க்குப் பின் சீக்கிரத்தில் ஆரோக்கியத்தையும் வலுவையும் திரும்பப் பெறச் செய்யக்கூடிய சரியான ஆகாரத்தை அளிப்பதால், அதன் மிகவும் உத்தமமான மதிப்பையும் அவசியத்தையும், எல்லா இடங்களிலும் உள்ள டாக்டர்களும் நர்ஸ்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

"ஓவல்டின்" னின் விரும்பத்தக்க சுவையானது நோயாளிகளின் ருசி உணரும் சக்தி குறைந்த காலத்து என்றும் ஒத்துக்கொள்வதாயும் சத்தாயும் இருக்கிறது. ஓவல்டின் சாரமாயும் பூரணமாயும் கொடுக்கும் முறைப்படி நன்று கூட்டு சத்தாக்கப்பட்ட ஆகாரம், எளிதில் ஜீரணிக்கப்பட்டு தேகத்தில் சேர்த்துவிடக்கூடியதாய் இருப்பதால் நோய்க்குப்பின் உடம்பின் தேவைக்கு மிகவும் ஏற்பதாக இருக்கிறது.

"ஓவல்டின்" சிறந்த பரிபூர்ணமான உணவு வேண்டிய போஷணைகளை மறுபடி திரும்பக் கொடுக்க வல்ல ஆகாரத்தாகும். அதில் சேர்த்துள்ள பழுத்த பார்லிமால்ட்டிலிருந்தும், புதிய ஏடுடன் கூடிய பசுவின் பாலிலிருந்தும், மற்றும் தேகத்துக்கும் மூளைக்கும் நரம்புகளுக்கும் வளர்ச்சி கொடுத்து பராமரிக்க வல்ல விட்டமின்களிலிருந்தும், இதர மூல வஸ்துக்களிலிருந்தும் கிடைக்கிறது. போஷிக்க விளக்குங்கள்

விநியோகஸ்தர்கள்: — கிரஹாம்ஸ் டிரேடிங் கோ (இந்தியா) லிட்., த. பெ. நெ. 1205. மதராஸ்: பம்பாயிலும், கராச்சி கல்கத்தாவிலும்:

தி இங்லிஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாபரேடிவ் ஹோல்சேல் சொஸைடி லிட்., கள்ளிக்கோட்டை (மலபார் கோஸ்டுக்கு)

'ஓவல்டின்'

'OVALTINE பலவிருத்தி ஆகார பானம்'

OV/103

இசைத் தட்டுகள்

இசைத்தேனீ


கொலம்பியா கம்பெனியார் வெளியிட்டிருக்கும் புதிய ஐந்து இசைத் தட்டுகளில், கலையுலகில் புகழ் பெற்றவர்கள் பாடியிருக்கிறார்கள்.

'நாத தனுமனிசம்' என்ற பழைய தியாகராஜ கிருதிக்குப் புத்துயிர் கொடுத்து இப்போது பிராபல்யப்படுத்தியவர் மதுரை மணி அய்யர். அவரே அப்பாட்டை ஜி. இ. 6347-ல் பாடியிருக்கிறாரென்றால் அதன் மகிமையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. 'ஸத்யோஜாதாதி' என்று தொடங்கும் சரணத்தில் அவரது தனி வழிகொண்ட ஸ்வரப்ரஸ்தாரத்தைச் சுருக்கமாகவே வழங்கியிருக்கிறார். மறு பக்கத்தில் 'தெலிஸிராமசிந்தன' என்ற பூர்ண சந்திரிகா கிருதி பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் அவரது பாணியை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. மனோதர்ம சங்கதி வனப்பின் மயக்கத்தில், சிற்சில இடங்களில் சாகித்யம் மழுப்பியதாய்க் கேட்கிறது.

ஜி. இ. 6356-ல் டி. கே. பட்டம்மாள் 'ஆடுவோமே', 'முரசு' என்ற பாரதியாரின் பாட்டுக்களை வழங்கியிருக்கிறார். வர்ண மெட்டுக்களின் பொருத்தமும், சாகித்யத் தெளிவும், சங்கதிகளின் வனப்பும் சேர்ந்து அவை உணர்ச்சி யெழுப்புகின்றன. இரண்டாவது பாட்டில் வெற்றி முரசு எட்டுத் திக்குகளிலும் உண்மையாகவே ஒலிக்கின்றது. வாத்ய கோஷ்டியின் பின்னணி சங்கீதம் எடுப்பாய்ப் பரிமளிக்கின்றது.

ஜி. இ. 6348, 6349 தட்டுகள் இரண்டிலும் திருவாவடுதுறை ராஜரத்னம் பிள்ளையவர்களின் நாதஸ்வரம் ஒலிக்கின்றதென்றாலே போதும். முன்னதில் சுபபந்துவராளி ராகத்தையும் இரண்டாவதில் அடியில் பல்லவி, அதைத் தொடர்ந்து மூன்று ராகங்களாலான மாலிகையையும் சக்கைப்போடு போட்டிருக்கிறார். தனிச் சிறப்புக் கொண்ட அவரது குழல் நாதம், கற்பனை வேலைப் பாடுகள், மனதை அள்ளும் அழுத்தமான கமக வினய குழைவுகள் எல்லாம் சேர்ந்து, காதை நிரப்பும் இன்னிசையைப் பொழிந்திருக்கின்றன. இப்போது சிலகாலமாய்ப் பரவி வரும் சுபபந்துவராளியின் பாணியைக் கவனித்திருப்பவர்களுக்கு, இவர் கையாண்டிருக்கும் வழி தனிப்பட்டதாகத் தென்படும்.

'கண்ணன் முகம் தோன்றுது' என்ற கமாஸ் உருப்படி ஒரு புறமும், 'ஆனிரை மேய்க்க' என்ற பாசுரத்தை சாகித்யமாகக் கொண்ட ராகமாலிகை மறு புறமுமாக ஜி. இ. 6340-ல் ஒலிக்கின்றன. பாடியிருப்பவர் முன்னர் 'எந்தவேடுகொந்து' தட்டில் வியக்க வைத்திருக்கும் வி. வி. சடகோபன். இந்த இசைத் தட்டிலும் அவரது குரல் வன்மையும் சாகித்யத் தெளிவும் ராக பாவமும் சிறந்து விளங்குகின்றன.





பட்டாக்கத்தி

-சந்திரா-

அன்று ஏனோ அந்த வண்டியில் அவ்வளவாகக் கூட்டமில்லை! நான் வெகு சுலபமாக வண்டியில் ஏறியதுகூட ஆச்சர்யமில்லை! எனக்குத் தாராளமாகப் படுப்பதற்கும் ஒரு இடம் கிடைத்ததுதான் ஆச்சர்யம். மேல்தட்டில் ஏறிக் கைப்பையைத் தலைக்கடியில் வைத்துக்கொண்டு படுத்தேன். வண்டி ஸ்டேஷனை விட்டு நகர ஆரம்பித்ததும் எனக்குச் சற்று தூக்கம் வருவதுபோலிருந்தது! ஆனால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. இரண்டு மூன்று ஸ்டேஷன்கள் தாண்டியிருக்கலாம். வண்டியில் ஆண்களும் பெண்களுமாகச் சிறிது கூட்டம் அதிகரித்தது. 'சள சள' வென்று அவர்கள் பேசுவதற்கிடையே நான் நிம்மதியாகப் படுத்துத் தூங்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தேன். இது என்னுடைய சாமர்த்தியமோ அசட்டுத்தனமோ?

திடீரென்று என்னுடைய கவனம் கீழே உட்கார்ந்திருந்தவர்களின் பேச்சில் லயித்தது. கேட்க ஆரம்பித்தேன்:—

"சார்! காங்கிரஸிலே இந்த இயக்கத்தை ஆரம்பித்ததே தவறு...!'

''என்ன ஐயா தவறு? இப்படி ஏதாவது செய்தாத்தானய்யா வழி பிறக்கும்—'

''அது கிடக்கு—இதைக் காங்கிரஸிலேயே ஆரம்பித்ததாகத்தான் வைச்சுக்குவோம். அதுக்காக இப்படி ஜனங்களை எங்கே பாத்தாலும் சுட்டுக்கொல்லவா சொல்றது?'' என்றார் ஒருவர் கோபமாக.

"இதிலே இன்னொரு விசேஷம்ன்னு! காங்கிரஸிலே சாத்வீகமாத்தான் போராடச் சொன்னாலே தவிர இப்படித் தந்திக் கம்பியை அறுக்கவும் தபால் ஆபீஸைக் கொளுத்தவுமா சொன்னு?'' என்றார் கோடியில் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ஆசாமி.

முதலில் அந்தப் பிரயாணிகளின் பேச்சு என் கவனத்தைக் கவர்ந்தாலும் பின்னால் ஏனோ அவர்களுடைய பேச்சில் எனக்கு அலுப்பேற்பட்டது. மறுபடியும் தூங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தேன்.



ஆறுமுகம்

கி.ரா.கோபாலன்

முகத்தைத் துணியால் மூடிக்கொண்டு திரும்பிப் படுத்தேன். அவர்கள் எப்படி யெப்படி யெல்லாம் விவாதித்து எந்தவிதமான முடிவுக்கு வந்தனரோ? ஆனால் நானும் தூங்கவில்லை! ஆகஸ்டு 1942-ல் நடந்த சம்பவங்களில் ஒன்று என் சிந்தனையில் சுழன்றது.

• • •

இப்பொழுது வருஷம் நான்காகி விட்டது. அதனால் என்ன? நூறு வருஷமே யானாலும் 1942 என்று யாராவது சொன்னால் போதும். எனக்குப் போலீஸ் 126-ன் ஞாபகம் வராமலிருக்காது.

'பட்டாக்கத்தி ஆறுமுகம்' பெயரைக் கேட்கும்போதே மனதில் கொஞ்சம் சம்சயம் ஏற்படுகிறதல்லவா? அதுவும் போலீஸ் டைரியில் இம்மாதிரியான பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால்! சாதாரணமாகக் கூட இல்லை! 1942 ஆகஸ்டில் வீரனூரில் நடந்த கலவரத்திற்குக் காரணமானவர்களில் இவனும் ஒருவனென்றால் கேட்கவா வேண்டும்? வீரனூர் தபாலாபீஸ் கொளுத்தப்பட்டது, ரயில்வே தண்டவாளம் பெயர்க்கப்பட்டது, தந்திக் கம்பி அறுக்கப்பட்டது, போலீஸ்காரர்கள் சுட்டுத் தள்ளியது, நூறு பேர்களுக்குமேல் பிராணத்தியாகம் செய்தது எல்லாம் இந்தப் பட்டாக் கத்தி ஆறுமுகத்தினால் தான் நடந்திருக்க வேண்டுமென்று அவன் பெயரைக் கேட்டவுடனேயே சுலபமாக முடிவுசெய்து விட்டார்கள். அவன் முதல் குற்றவாளியாக்கப் பட்டான். அதோடு மாத்திரமல்ல; அந்த அப்பாவி ஆறுமுகம் எங்கோ பயந்து ஒளிந்து கொண்டிருந்தான். அவன் ஒளிந்து கொண்டிருந்த இடம் போலீஸாருக்குத் தெரியாமல் போனது இன்னும் அதிக ஆத்திரத்தையும் பரபரப்பையும் உண்டாக்கியது. போலீஸ் இலாகாவின் கவனம் முழுவதும் ஆறுமுகத்தை எந்தப் பொறியில் வைத்துப் பிடிக்கலாம் என்பதிலேயே இருந்தது. ஊருக்கு ஊர் போலீசார் சோதனை போட்டுக் கொண்டிருந்தனர்.

நம்பர் 126 பரமசிவம் போலீஸ் வேலைக்கே பொருத்தமில்லாத ஆத்மா! அளவுக்கு மீறிய மன இளக்கமும் நியாய

உணர்ச்சியும் கொண்டவன். ஒருவரை அதட்டிப் பேசக்கூடத் தெரியாது. போலீஸ் இலாகாவிலுள்ள மற்ற சகபாடிகள் அவனைப் பரிகாசம் செய்தால் அதில் வியப்பென்ன இருக்கிறது? அவனுடைய குணம் எப்படியிருந்தாலும் உத்யோகத்திற்கேற்ற தேக ஆகிருதியிலும், ஒழுக்கான நடை முறையிலும் எவ்விதக் குறையும் காணமுடியாது அவனிடம். எல்லோரையும்போலப் பட்டாக்கத்தி ஆறுமுகத்தைப் பிடிப்பதில் அவனுக்கும் சிறிது ஆர்வமிருந்தது.

நம்பர் 126 மூன்று தடவை அந்த ஊரைச் சுற்றிச் சுற்றி வந்து விட்டான். வீரனூருக்கு முப்பது மைல் தாண்டித் திண்ணனூரில் வந்து ஆறுமுகம் ஒளிந்திருக்க வேண்டுமென்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? ஆனால் பரமசிவத்துக்கு என்னவோ அவன் அந்த ஊரில்தான் ஒளிந்திருக்க வேண்டுமென்று பட்டது. இதற்கு ஆதாரம் காட்ட அவனிடம் ஒன்றுமில்லை. இருந்தாலும் அவன் மனதில் ஆறுமுகம் இங்குதான் இருக்க வேண்டுமென்ற சம்சயம் விடாப்பிடியாக ஒட்டிக் கொண்டிருந்தது. அந்த கிராமத்து ஜனங்களை எப்படியெப்படி யெல்லாமோ குடைந்து விசாரித்தான். ஒரு துப்பும் துலங்கவில்லை. அலைந்து அலைந்து கால் ஓய்ந்து விட்டது. ஒவ்வொரு வீட்டையும், ஒவ்வொரு மனிதனையும் உற்று உற்றுப் பார்த்து அவன் கண்கள் எரிச்சலெடுத்து விட்டன. அதோடு மட்டுமல்ல; நல்ல வெய்யில்; வயிற்றுப் பசி — சிரமம்; கொஞ்சம் களைப்பாற்றிக் கொள்ளலாமென்று மேலத் தெருவிலுள்ள ஒரு மாடி வீட்டில் போய்க் குல்லாயைக் கழற்றிப் பக்கத்தில் வைத்துக் கொண்டு 'முருகா!' என்று சொல்லிக் கொண்டே தூணில் சாய்ந்து உட்கார்ந்தான். அப்பொழுது அவனுக்கு இருந்த அலுப்பில் திண்ணையில் படிந்திருந்த தூசியும் குப்பையும்கூட அவன் கண்களில் படவில்லை. சிறிது சிரமம் தீர்ந்த பிறகுதான் அந்த வீடு எவ்வித நிலையிலுள்ளது என்பதைக் கவனிப்பதற்கு மனதில் இடமேற்பட்டது.



மாடி வீடாயிருந்தாலும் சிறிய வீடுதான்! திண்ணை முழுதும் குப்பையும் மண்ணும் படிந்திருந்ததே தவிரப் பாழடைந்து போனது போலத் தோன்றவில்லை. 'இந்த வீட்டில் ஒருத்தருமில்லையா?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே கதவுப் பக்கம் பார்வையைச் செலுத்தினான். கதவு வெளியே பூட்டப்பட்டிருக்கவில்லை. யாரோ உட்புறமாகத் தாளிட்டுக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது.

பட்டாக் கத்தி ஆறுமுகம் அந்த ஊரில்தான் ஒளிந்து கொண்டிருக்க வேண்டுமென்று ஆதாரமில்லாது எழுந்த அவன் நம்பிக்கைக்கு அந்த வீடு ஒரு சரியான ஆதாரமாகப் பட்டது. 'ஒரு வேளை ஆறுமுகம் இந்த வீட்டிலேயே ஒளிந்து கொண்டிருக்கலாமோ?' அவன் அதிக நேரம் இதைப்பற்றி யோசிக்கவில்லை. சட்டென்று எழுந்து கதவைத் தட்டினான். எவ்விதப் பலனும் காணவில்லை! இருந்தாலும் அவனுடைய நம்பிக்கை மாத்திரம் வலிவடைந்து வந்தது. கதவினிடையே இருந்த சிறிய இடுக்கு வழியாக உள்ளே பார்த்தான்! யாரோ இருப்பதுபோலத் தோன்றியது; உள்ளே யாரோ இருவர் பேசுவதுபோலவும் அவன் காதில் விழுந்தது. மறுபடியும் கதவைப் பலங்கொண்ட மட்டும் தட்டி "ஐயா! ஐயா!" என்று இரைந்து கூப்பிட்டான்.

"யாரது?" என்று உள்ளேயிருந்து வரும் குரல் பெண் குரலாய் இருந்தது.

"கதவைத் திறவுங்க!" என்றான் அதிகாரத்துடன்.

கதவு திறக்கப்படவில்லை; "யாரது சொல்லுங்க"—அதே பெண்ணின் குரல்தான். அவன் கதவுக்குச் சமீபமாக வந்து நிற்கிறான் என்பதை அவனது தெளிவான குரல் உணர்த்தியது.

"கதவைத் திறக்கத் தெரியும்"—நான் தான் போலீசு 126 என்று சொல்லி விடுவதற்குப் பரமசிவம் அவ்வளவு அசடா?

மெதுவாகக் கதவு திறக்கப்பட்டது; பாவம்! அந்தப் பெண் வாயிற்படியில் ஒரு போலீஸ் சேவகன் நிற்பதைக் கண்டதும் திடுக்கிட்டுப் பயந்து நடுங்கி நின்றாள். பரமசிவமும் அவளைப் பார்த்ததும் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான். அவன் ஏன் அப்படி நிற்க வேண்டும்? அவளுடைய பயந்த முகத்தைப் பார்த்தவுடனே அவன் மனது இளகி விட்டதா? அந்தப் பெண்ணின் அழகிய முகத்திலுள்ள இரு விழிகளிலும் ஏதாவதுகாந்த சக்தி இருக்கிறதா?

அவளுக்கு வயது பதினாறு அல்லது பதினேழுதானிருக்கும். கிராமத்துப் பெண்தானே! ஆடம்பரமான ஆடை அணிகளை அவள் அணிந்துகொண்டிருக்காவிட்டாலும் அவளுடைய மங்காத முகப்பொலிவும் பார்வையின் குறுகுறுப்பும் எவரையும் சற்றுத் தயங்க வைக்கும் சக்தியுடையவைகளாய்த்தான் இருந்தன. போலீஸ்காரரைக் கண்டதும் பயந்து நடுங்கிய அவள் ஒருவிதமாக மனதில் தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டவள் போல் "ஏன்? என்ன...?" என்றாள் நடுக்கும் குரலில்.

பரமசிவம் சிறிது நேரம் தயங்கி நின்றான். பாவம்! அப்பொழுது அவளுக்குப் பதில் சொல்லுவதற்கு அவன் தன்னைச் சிறிது தயார் செய்து கொள்ளத்தான் வேண்டியிருந்தது. "ஹும் — ஒன்றுமில்லே...கொஞ்சம் தாகமாயிருக்குது....தண்ணி வேணும்ன்னு....." என்று இழுத்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் அவனால் அவளுக்கு இப்படித்தான் பதில் சொல்ல முடிந்தது.

"சரி! இருங்க! கொண்டு வந்து தறேன்" என்று சொல்லி விட்டு அந்தப் பெண் மறுபடியும் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு உள்ளே போனாள்.

பரமசிவம் திண்ணையில் உட்கார்ந்தான். அவனைக் கண்டதும் அவள் பயந்து விட்டது அவனுக்கு ஆச்சரியத்தையோ சந்தேகத்தையோ உண்டாக்கவில்லை. இது சகஜம்; திடீரென்று ஒரு வீட்டிற்குப் போலீஸ்காரர் வந்தால் யார்தான் பயப்பட மாட்டார்கள்? ஆனால் அவள் மறுபடியும் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு போனதுதான் அவனுக்கு ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கியது. அவள் தண்ணீர் கொண்டு வந்தவுடன் அவளைப் பலவிதமான கேள்விகளைக் கேட்டு உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைத்தான். பத்து நிமிஷங்கள் சென்றது; மறுபடியும் கதவு திறக்கப்பட்டது! அந்தப் பெண் ஒரு சிறிய செம்பில் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்துவிட்டு வாசற்படி நிலைக் கட்டையில் சாய்ந்து நின்றாள்.

பரமசிவம் குல்லாயைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு வாய் தண்ணீரைக் குடித்துவிட்டுக் கனைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தான். "இந்த வூட்டுலே இன்னும் யாரேனும் இருக்காங்களா?" அவள் சிறிது தயக்கத்துடனேயே பதிலளித்தாள். "ஹும்..... இருக்கு எங்க அண்ணாச்சி இருக்குது"

"மனுசா இருக்கும்போது இந்த வீடு இப்படிப் பாளடைஞ்ச வீடு மாதிரி கிடக்குது! ஹும்—உங்க அண்ணாச்சி யாரு?"



பரமசிவத்தின் கேள்வி அவளுக்குச் சற்று வினோதமாகப் பட்டது போலிருக்கிறது. எப்படியோ அவளுக்கும் அவனோடு சற்று தாராளமாகப் பேசத் தைரியம் ஏற்பட்டது. "எங்க அண்ணாச்சி யாருன்னு நான் என்னத்தைச் சொல்றது? அதுவும் இந்த ஊர்லே இருக்கிற குடியானவ ஜனங்க மாதிரிதான் எங்க அண்ணாச்சியும் — ஏர் கலப்பை பிடிச்சு உழறதுதான்."

பரமசிவம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கு முன்பிருந்த பசி, களைப்பு எல்லாம் எங்கேயோ பறந்தோடி விட்டது. சிரித்துக் கொண்டே பேச ஆரம்பித்தான். "பாவம்! உனக்குத் தாயார் தகப்பனார் இருக்காங்களா?"

"இல்லே. அவங்க இறந்து போயி நாலஞ்சு வருஷமாச்சு மிருக்கும். இப்போ நானும் எங்க அண்ணாச்சியுந்தான்."

"இந்த வீடு உங்க சொந்த வீடுதானா?"

"ஆமாம்! எங்கம்மாளுக்குச் சொந்தமா வந்தது."

"சரிதான்! நீங்க என்ன ஜாதி?"

"அம்பலக்காரங்க!'

"அம்பலக்காரங்களா?" அவனுக்கு ஆச்சர்யத்துக்கு மேல் ஆச்சர்யமாயிருந்தது. அவன் அப்படி எல்லைமீறி ஆச்சர்யப்படக் காரணமாயிருந்தது ஒன்றே ஒன்றுதான். அது அவளும் அம்பலக்கார ஜாதியைச் சேர்ந்தவளென்பதுதான். "நானும் அம்பலக்காரன்தான்" என்று அவளை ஒரு தினுசாகப் பார்த்து விட்டு இன்னொரு வாய்த் தண்ணீர் குடித்தான்.

அவனுடைய பதில் அவளுக்கும் ஆச்சர்யத்தை உண்டாக்கியதும் தவிரக் கொஞ்சம் பெருமையையும் கொடுத்தது. தங்கள் ஜாதியிலும் ஒரு போலீஸ்காரர் இருப்பாரென்று அவள் நினைத்ததே கிடையாது. அவள் புன்முறுவல் பூத்தபடியே உடம்பை நெளித்துக் கொண்டு "நீங்க எந்த ஊரு?" என்றாள்.

பரமசிவத்துக்கு அப்பொழுது புழுதி நிறைந்த திண்ணையில் உட்கார்ந்திருப்பது போலவேயில்லை. சொர்க்கத்திலிருப்பது போலத்தான் இருந்தது. கண்கொட்டாமல் அவளைப் பார்த்தபடியே "நானா? ஹ்ும்... அந்த ஊரெல்லாம் இப்போ யாரு கண்டா? புதுக்கோட்டைக் கிட்ட இருக்குல்ல குளமங்கலம்? அதுதான்" என்றான்.

"குளமங்கலமா? அங்கேகூட முந்தி எங்களுக்கு உறமுறை யாரோ இருந்தாங்களாம்—"

"வீரனூருலே கூட உங்களுக்கு உறமுறை இருக்காங்களா?"

பரமசிவம் திடீரென்று வீரனூரைப் பற்றிப் பேச்செடுத்ததும் அவள் திடுக்கிட்டாள். சிறிது நேரம் தயங்கியே அவனுக்குப் பதில் சொன்னாள். "உறமுறை என்ன? எங்க சொந்த ஊரே அதுதான்."

"சரிதான்! உனக்குக் கல்யாணமெல்லாம் உங்க அண்ணாச்சிதானே செய்து வைக்கணும்?"

கல்யாணப் பேச்சை எடுத்ததும் அவளை வெட்கம் வந்து சூழ்ந்து கொண்டது. அவள் தலை குனிந்தபடியே மெதுவாக "ஆமாம்!" என்றாள்.

"உன் பெயரு என்ன?"

"தங்கம்"

"நல்ல பேராகத்தான் இருக்குது! உங்க அண்ணாச்சி பேரு?"

அவள் சிறிது தடுமாறினாள்! சுற்றிச் சுழன்று வந்து இப்படி ஒரு இடத்தில் சிக்கிக் கொள்வோமென்று அவளுக்கு எப்படித் தெரியும்? அவள் முகத்தில் பயத்தின் நிழல் படர்ந்தது. "அவரு பேரா? அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு?"

"எல்லாம் நல்ல விஷயத்துக்குத்தான்! நீயும் இப்படியே கல்யாணமில்லாமே இருக்க முடியாது; நானும் இருக்க முடியாது, பாரு!"

அவன் இவ்வளவு தூரம் தன்னிடம் சரசசல்லாபத்திற்கு வந்து விடுவானென்று அவள் நினைக்கவில்லை. போலீஸ் உடுப்போடு இருந்த அவன் கட்டமைந்த மேனியும் - இளமையும் - அழகும் - இனிமையான பேச்சும் அவள் மனதைக் கவர்ந்தது. அவன் தன் ஜாதியான் என்று தெரிந்தவுடனேயே இப்படிப் போலீஸ் உத்யோகத்துடன் இவ்வளவு அழகாக நமக்கு ஒரு புருஷன் வாய்க்கக் கூடாதா என்று எண்ணினாள். தெய்வாதீனமாக அவனுடைய பேச்சின் போக்கும் அவளுடைய விருப்பத்திற்கிணங்கியதாக இருக்கவே அவளுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவில்லை. மனதில் ஒருபுறம் வெட்கமும் பயமுமிருந்தாலும் உந்திக் கொண்டெழுந்த ஆனந்தத்தில் என்ன சொல்கிறோமென்றே அவளுக்குப்

புரியவில்லை. "எங்க அண்ணாச்சி பேரு ஆறுமுகம்" என்றாள்.

பரமசிவம் திடுக்கிட்டான். அப்பொழுது தான் அவனும் இந்த உலகத்திற்கு வந்தான். "ஆறுமுகமா? பட்டாக்கத்தி......" என்று ஆத்திரத்துடன் சொல்லி நிறுத்தினான்.

தங்கம் தன் தவறை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டவள் போல் "இல்லை... இல்லை" என்று கத்தினாள், பயத்தோடு உதறும் குரலில். பரமசிவத்திற்கு உண்மை விளங்கி விட்டது. பாவம்! சாதாரணமாகவே இரக்கமுள்ள அவன் மனது தங்கத்தின் பயமும் கெஞ்சுதலும் நிறைந்த முகத்தைப் பார்த்தபின்னும் கனிந்து உருகாமலிருக்க முடியுமா? மெதுவான குரலில் "தங்கம்! ஏன் இப்படி பயப்படுறே! எங்கிட்ட உண்மையை சொல்லிப்பிடு......"

"என்ன உண்மையை நான் சொல்ல?" என்றாள் அவள்.

"உங்க அண்ணன்தானே பட்டாக்கத்தி ஆறுமுகம்......?"

தங்கம் அவனுடைய முகத்தை உற்று கவனித்தாள். அவனிடம் நம்பிக்கை ஏற்பட்டது. "நீங்க அவரைத் தேடிக்கிட்டுதானே இந்த ஊருக்கு வந்திருக்கீங்க?" என்றாள் அறை குறையான தைரியத்தோடு. "ஆமாம்! அது கிடக்கு! அது பாரு தங்கம்! உன்னைப் பார்த்த உடனேயே என்னை அறியாமல் என் மனசை உக்கிட்ட ஒரு தினுசான ஆசை கொண்டுடேச்சு. அப்புறம் நீயும் அம்பலக்கார ஜாதிதான்னு தெரிஞ்ச உடனே உன்னை எப்படின்னாலும் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு ஆசை தோணிடுச்சு. தங்கம், இதோ பாரு! என்னை நம்பு; இப்போ உங்க அண்ணன் வீட்டுக்குள்ளாற தானே இருக்காரு? பயப்படாதே சொல்லு!"

"எனக்கு ஒன்னும் பயமில்லை. ஆனா உங்க வார்த்தையிலே எனக்கு நம்பிக்கை வேணுமா?"

"தங்கம்! நான் உன் புருஷனாயிட்டா எதையும் நம்புவேல—அதைப்போல இப்பவும் நம்பு. தங்கம், நான் ஒரு நாளும் உங்க அண்ணாச்சியைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். இந்த உத்யோகம் போனாலும் சரி! உனக்காக உங்க அண்ணனைக் காப்பாத்த வேண்டியது என் பொறுப்பு — மாரியாத்தா ஆணையா சொல்றேன். இதோ பாரு! முதல்லே உங்க அண்ணனைப் பார்த்து நம்ம கல்யாண விஷயத்தை முடிக்கணுமே! தங்கம் உனக்கு இதுலே சம்மதந்தானே?"

தங்கத்தின் மனதில் ஆனந்தம் பெருக்கெடுத்தோடியது — பரமசிவத்தினால் தன் சகோதரனின் கஷ்டமெல்லாம் தொலைந்து விட்டதாக எண்ணினாள். அதோடு மட்டுமா? தன் வாழ்விலேயே எதிர்பாராத விதமாக இவ்வளவு அழகாக அதுவும் போலீஸ் உத்தியோகத்துடன் ஒரு கணவன் அமைவது எவ்வளவு அதிர்ஷ்டம்? அவளுடைய தேகத்திலேயே அப்பொழுது புதிய ரத்தம் ஓட ஆரம்பித்தது. அழகுள்ள அவளுடைய கண்களில் ஆனந்தத்தின் பேரொளி வீசியது. அப்பொழுது திண்ணையிலுள்ள செம்பைக் கையிலெடுத்துக் கொண்டு 'உள்ளே வாங்களேன்!" என்றாள் வெட்கமும் ஆவலும் மீற.

பட்டாக்கத்தி ஆறுமுகம் எதிர்பாராத விதமாக ஒரு போலீஸ்காரன் தன் வீட்



"என்னப்பா இது என்னமோ எழுதித் தொங்கவிட்டிருக்கே? ஏதாவது பைத்தியம் கித்தியம் பிடித்துப் போச்சா உனக்கு?"

"அட போப்பா—நான் எங்கள் ஊருக்குப் போறேன். அங்கே கேட்கிற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியல்லே, அப்பா!"

டிற்குள் வந்ததைக் கண்டு நடு நடுங்கி விட்டான். "சாமி! நான் ஒரு தவறும் செய்யவில்லை. என்னை ஒன்றும் செய்யாதீங்க! நான் கூட்டத்தோடு கூட்டமா போனேன். எனக்கு ஒரு பாவமும் தெரியாதுங்க! என்னை விட்டுடுங்க" என்று கதறியபடியே பரமசிவத்தின் காலில் விழ வந்தான். பரமசிவம் சட்டென்று அவனை அணைத்துப் பிடித்துக் கொண்டு "அடடே! இதென்ன பயித்தியக்காரத்தனம்! உன்னை நான் எதுவும் செய்ய வரலேய்யா! கல்யாணம் பேசி முடிக்கல்ல உங்கிட்ட வந்திருக்கேன்?" என்றான்.

ஆறுமுகத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. இது அவனுக்கு ஏதோ பரிகாசமாகத்தான் தோன்றியது. 'திரு திரு'வென்று விழித்துக்கொண்டே கையைப் பிசைந்து கொண்டு நின்றான். தங்கம் ஒரு பக்கத்தில் வெட்கத்துடன் தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள்.

"இதோ பாருங்க! உங்க தங்கச்சியை நான் கட்டிக்கணும்னு ஆசைப்படறேன். என்ன சொல்றீங்க" என்று கண்டிப்பாகக் கேட்பவன்போல் அங்கு விரிக்கப்பட்டிருந்த பாயில் உட்கார்ந்து ஆறுமுகத்தையும் உட்காரும்படி சொன்னான்.

ஆறுமுகத்தின் மனதில் பயம் தணியவேயில்லை! "இல்லீங்க" என்று கழுத்தைத் தடவியபடியே நின்றான்.

"அடடே! உக்காரப்பா! நெசமாத்தான் சொல்றேன். உன் தங்கச்சியை எனக்குக் கட்டிக் கொடுக்கணும்."

"எனக்கொண்ணும் விளங்கல்லீங்களே!" என்று சொல்லிக் கொண்டே அரை குறையான மனதோடு பாயில் அமர்ந்தான் ஆறுமுகம். தங்கத்துக்கு வெட்கம் அதிகரிக்கவே சிரித்துக் கொண்டே சமையலறைக்குள் ஓடி விட்டாள்.

"இதோ பாரு ஆறுமுகம்! நான் உன்னைப் பிடிக்கத்தான் வந்தேன். ஆனா நீ இப்படி ஒரு தங்கச்சியைக் காட்டி என் மதியை மயக்கிடுவேன்னு எனக்குத் தெரியாது. இதோ பாரு! நானும் ஒரு அம்பலக்காரன்தான். எனக்கும் கொஞ்சம் நில புலன் ஊருலே இருக்குது. எங்க தகப்பனாரு பாட்டனாரு எல்லாரும் ஒரு கட்டி உளுதவங்கதான். உன்னை நான் பார்த்துக்கிறேன். நீ பயப்படாதே! நீ கொஞ்ச நாளைக்குக் காவல் தெளியற வரையிலே இங்கேயே ஒளிஞ்சிரு...... நீ என்ன சொக்கறே? உன் தங்கச்சியை நான் கட்டிக்கிறத்திலே உனக்கு இஷ்டந்தானே?"

ஆறுமுகத்திற்கு அப்பொழுது எந்த உலகத்திலிருக்கிறோமென்றே புரியவில்லை. பரமசிவம் ஒரு போலீஸ்காரன்தானா, அல்லது கடவுளே அப்படி ஒரு வேஷம் போட்டுக் கொண்டு தனக்கு அபயமளிக்க வந்திருக்கிறாரா என்று அவனுக்குத் தெரியவில்லை. "சரிதான்! நீங்களே வலிய வந்து கேக்கும்போது நான் என்ன சொல்ல? எதுக்கும் தங்கச்சிக்கும் சம்மதந்தானான்னு தெரிஞ்சிக்கிட வேண்டாமா?"

"மூதக்லே அவ சம்மதத்தைத் தெரிஞ்சுக்கிட்டுதானே ஊட்டுக்குள்ளார வந்தேன்? அதிருக்கட்டும்! உனக்கேன் இந்தப் பட்டாக்கத்திங்கிற பட்டப்பேரு! உன்னைப்பாத்தா எனக்கு அப்படி ஒண்ணும் தோணல்லேயே! இந்தப் பேரைக் கேட்டு ஊரே மிரளுதே?"

"அதுங்களா! எங்கக் குடும்பப் பேருங்க! எங்க மூப்பாட்டனாரு தஞ்சாவூரு சோள ராஜா சபையிலே சிலம்பம் விளையாடிக் காட்டினாராம். அப்போ மகாராஜா சந்தோஷப்பட்டு அவருக்கு ஒரு பட்டாக்கத்தியும் மானியமும் கொடுத்தாராம். அதுலேயிருந்து எங்க குடும்பத்துக்கு அந்தப் பேரு நிலைச்சுப் போயிடுத்துங்க"


"நல்லாருக்கு! இவ்வளவு தானே? அப்பப்பா! என்ன கதை அளக்கிறாங்கப்பா! பயித்தியக்காரத்தனம்! யாராச்சும் கேட்டாலும் சிரிப்பாங்க. இந்தப்பேரு போலீசு இலாக்காவையே ஒரு கலக்குக் கலக்கிடுச்சே......"

* * *

பரமசிவத்துக்கு அன்று மத்யானம் அந்த வீட்டிலேயே சாப்பாடு!

தங்கமல்லவா தன் கையால் சமைத்து அவனுக்குப் பரிமாறியிருக்கிறாள்? சாப்பாட்டின் ருசியைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? அவனுக்கு அந்த வீட்டை விட்டுப் போகவே மனமில்லை. பாவம்! அவன் சாயந்திரம் தொப்பியைத் தலையில் வைத்துக்கொண்டு புறப்பட்டபோது தங்கத்துக்கு துக்கமாய் தான் இருந்தது. அடிக்கடி வந்து போய்க் கொண்டிருப்பதாக அவளுக்குச் சமாதானம் சொல்லிவிட்டுத் தன்னையும் ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு புறப்பட்டான் பரமசிவம்.

(அடுத்த இதழில் முடியும்)



கிராக்கிக்கு மெத்தனையோ குறைவாகத்தான்

எங்களிடம் சரக்குகள் விற்பனைக்குள்ளன. சிறந்த சாமான்களுக்கு வேறு விளம்பரம் ஏன், இதுவே எப்பொழுதும் எமது கொள்கை. எனினும், எங்கள் வர்த்தக முத்திரைக்கிருந்துவரும் நன்மதிப்பானது, அந்த முத்திரையை பிரசித்திப் படுத்துவதையே ஆதாரமாகக் கொண்டதென்பதை நாம் மறந்துவிடலாகாது. பிரசித்தப் படுத்துவது எதற்காகவென்றால், "நாங்கள் இன்னும் வேலை தொடர்ந்துதான் வருகிறோம். கூடிய சீக்கிரம் போதுமான சரக்குகள் உங்களுக்குக் கிடைக்கச் செய்வோம்" என ஆவசியக்காரர்களுக்கு உறுதி கூறவேதான்.

கம்பளி: பூராவும் கம்பளி ஸூப்பர் ப்ளாங்கெட்டுகளும் பிரயாண ரக்குகளும்—ட்வீடுகளும், தேசிய கம்பளி தினுசுகளும், யூனியன் ஷர்ட்டிங்குகளும்.

பருத்தி: ஸெல்லா ஷர்ட்டிங்குகளும், தேசிய லாங்கிலாத்தும்—கோல்ட் ஸ்டாண்டர்ட் ஷர்ட்டிங்குகள்—லேடீ லாங்கிலாத்தும், சாயம் தோய்த்ததும்—ஸாம்ரா ஸூட்டிங்குகள் — டஸ்ஸோர்கள் — ட்ரில்கள் — டிவில்கள் வகையரு......

பட்டு: 44"/45" அகலம், பற்பல சாயல்களில்.

தயாரிப்போர்கள்: தி பங்களூர் வூலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கோ., லிட்.

ஏஜண்டுகள், காரியதரிசிகள், ட்ரெஷரர்கள்

பின்னி & கோ.

(சென்னை) லிட்.

"ஆடு மார்க்கு"—தனிதரத்துக்கேற்ற துணிகளின் அறிகுறி.

அபவாதம்

ஆர். கே. பார்த்தசாரதி

ஓர் அழகிய பங்களாவின் பரந்த முற்றத்தில் இரண்டு பெண்மணிகள் உல்லாசமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். ரமணீயமான அந்தி வேளையில் 'ஜிலுஜிலு' என்று அடித்துக் கொண்டிருந்த காற்று பேச்சின் சுவாரஸ்யத்தை அதிகப்படுத்தியது. அவ்வப்போது தெருவில் சென்று கொண்டிருந்த மனிதர்கள் அவர்களுடைய சம்பாஷணைக்குச் சந்தர்ப்பங்களைச் சிருஷ்டி செய்து கொடுத்துக் கொண்டிருந்தனர். எனவே நிகர் நிமிஷமான அவர்களுடைய பேச்சின் விஷயங்களும் மாறிக் கொண்டிருந்தன.

அவ்விருவருள் ஒருத்தி அவ்வூருக்கு ஒரு வருஷத்திற்கு முன் மாற்றலாகி வந்த சர்க்கார் டாக்டரின் மனைவி கமலா; மற்றொருத்தி அவளுடைய தோழி ராஜம்.

பேச்சின் நடுவில், தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்த ஒரு பெண்ணுருவம் அவ்விருவருடைய கவனத்தையும் கவர்ந்தது. பரட்டைத் தலையும் கிழிந்த உடையுமாக இருந்த அந்தப் பெண் கமலாவின் அனுதாபத்தைக் கிளப்பினாள். "பாவம், யாரோ பைத்தியம் போலிருக்கு!" என்று அவள் கூறினாள்.

உடனே ராஜம், "நன்னாச் சொன்னே! அவளா பைத்தியம்! ஆம்படையானைக் கொன்னூட்டு எல்லாரையுமன்னா பைத்தியமா அடிச்சுட்டா, அவள்!" என்று அருவருப்புடன் கூறினாள்.

"ஆமாம், அவ ஆம்படையானைக் கொல்லும்போது நீ நேரில் பார்த்தாயாக்கும்!" என்று கமலா அப் பைத்தியத்திற்குப் பரிந்து பேசினாள்.

"என்னவோ அம்மா, இந்த ஊரிலே அத்தனை பேரும் பார்த்தாளாம். அவா சொல்றதைத்தான் நானும் சொல்றேன்!" என்று ராஜம் சிறிது ஸ்வரமிறங்கிப் பதில் சொன்னாள்.

உடனே கமலா, "அதுக்காகத்தான் நீ நேரிலே பார்த்தியோன்னு கேட்டேன். இப்படியேதான், ஆம்படையானைக் கொன்னுட்டான்; மூத்தா பிள்ளைக்கு விஷம் வைச்சுட்டான்னு பொய்யும் புளுகுமா எத்தனையோ அபவாதம் கிளம்பறது! விசாரிச்சா அத்தனையும் கட்டுக் கதையாயிருக்கும்!" என்று ஓர் குட்டிப் பிரசங்கம் செய்து விட்டாள். ராஜத்தின் முகம் சிறுத்துவிட்டது. இதனை யறிந்த கமலா, "ராஜம்! நான் உன்னை ஒண்ணும் தனியா சொல்லலே. லோகமே இப்படி யிருக்குன்னுதான் சொல்ல வந்தேன். அபவாதமெல்லாம் ஆதாரமில்லாமலேயே கிளம்பறதுங்கறதுக்கு என் சொந்த அனுபவத்தையே சொல்றேன், கேளு. அப்புறம் நான் இப்போ சொன்னது சரியா இல்லையான்னு பாரு!" என்று பிரம்பு நாற்காலியை ராஜத்தின் பக்கம் இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

* * *

அப்போது கமலாவின் கணவன் டாக்டர் சிவராமன் சொந்தத்தில் தொழில் நடத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு நெருங்கிய பக்கத்து உறவினர், பிறந்தகத்து உறவினர் யாரும் கிடையாது. எடுத்ததற்கெல்லாம் வேலைக்காரர்கள் இருந்தாலும், நோவு நொடிகளை அவ்வப்போது கவனிக்கும் ஆற்றலும் ஏராளமான வருமானமும் சிவராமனுக்கு இருந்தாலும், உறவினர்களில்லாமலேயே அத் தம்பதிகள் வாழ்க்கைப் படகைச் சிரமமில்லாமல் செலுத்திக் கொண்டிருந்தனர்.

அப்போது கமலாவிற்குப் பிரசவ சமயம். நர்ஸுகளை வைத்துக் கொண்டே சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கையில் கவலையற்று அவ்விருவரும் இருந்த பொழுது, அவர்களுடைய வாழ்வில் அந்த 'அம்மாமி' வந்து இணைந்து கொண்டாள்.

அவள் பெயர் சரஸ்வதி; அவளுக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். விதவையான அவள் பிச்சை எடுப்பதைத் தன் தொழிலாகக் கொண்டிருந்தாள்.

முதன் முதலாக அந்த அம்மாமியும் கமலாவும் சந்தித்தபோது அவர்களிடையே காரணமில்லாத ஒரு பந்தம் ஏற்பட்டது. கமலாவின் கைகள் அம்மாமிக்கு வழங்

கத்தைவிட அதிகமான அரிசியை வழங்கிய போது, அம்மாமியின் இதயமும் வழக்கத்தை விட அதிகமான நன்றியைக் கமலாவிற்கு அளித்தது. கமலா 'பிள்ளைத் தாய்ச்சி' என்று அறிந்ததும் அந்த அம்மாமி, "எத்தனை மாசம்டி, அம்மா?" என்று தாயின் அன்புடனும் ஆதரவுடனும் கமலாவை விசாரித்தாள்.

இந்தப் பூர்வாங்கத்துடன் அவ்விருவரும் சிறிது நேரம் ரேழியிலேயே உட்கார்ந்து பேச ஆரம்பித்தனர். கமலாவைப் பற்றிய சகல செய்தியும் அம்மாமிக்குத் தெரிந்துவிட்டது. பிரசவத்திற்குப் பெரியவர்களின் உதவி யில்லை என்று கமலா கூறியது அம்மாமியின் அன்பிற்கு ஒரு பாதையை வகுத்துவிட்டது. அறையில் அவளுக்கு வேண்டிய உதவிகள் யாவற்றையும் தானே செய்வதாக அம்மாமி கூறிய போது, கமலா தன் காதுகளையே நம்ப வில்லை. கணவனைத் தவிர்த்து வேறு யாரும் அவள் மீது இதுவரை அத்தனை அன்பைப் பொழிந்ததில்லை. அதே சமயத்தில் அந்த அம்மாமியின் கடைசி வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே வந்த டாக்டர் அந்த எதிர்பாராத உதவியைக் கடவுளின் கருணையாகக் கருதினார். அன்றைய தினத்திலிருந்தே தம் மனைவிக்குத் துணையாக இருக்க வேண்டுமென்று டாக்டர் அம்மாமியை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.


சரஸ்வதி அம்மாமி செய்த பல காரியங்களுள் ஒன்று மட்டும் கமலாவிற்கு விளங்கவே யில்லை. அவள் அன்னியர் ஒருவர் முன்னிலையிலும் நடமாடுவதே கிடையாது. சமையலறையிலோ அல்லது பிறர் கண்களில் படாத ஏதாவது ஓரிடத்திலோ தான் அடங்கிக் கிடப்பாள். இதன் காரணத்தை வெகு நாட்களாகக் கேட்க வேண்டுமென்று கமலா விரும்பினாளே யொழிய, அவ்விதம் கேட்கவில்லை.

கமலாவின் பிரசவ சமயத்திலும், அதன் பிறகு பத்து நாட்கள் வரையிலும் அம்மாமி செய்த பேருபகாரத்தின் ஒரு பகுதியைக் கூட அவள் தாயார் செய்திருக்க முடியாது. அறையில் தங்கியிருந்த போதும் அம்மாமி தன் முகத்தை வீட்டிற்கு வந்த ஒருவருக்காவது காட்டவில்லை. பிறர் பார்ப்பதற்குக் குழந்தையை நிலைப்படிக்குப் பக்கத்தில் வைத்து விட்டு அப்புறம் சென்று விடுவாள்.

அம்மாமி, புண்யாஹவாசனத்தன்று காலையில் குழந்தைக்கும் தாயாருக்கும் எண்ணெய் தேய்த்துவிட்டு, மற்றக் காரியங்கள் யாவற்றையும் சீக்கிரமாகச் செய்து முடித்துவிட்டாள். வழக்கத்தைக் காட்டிலும் அதிகமான சுறுசுறுப்பு அன்று அம்மாமியிடம் காணப்பட்டது. மாலையில் குழந்தையைத் தொட்டிலிட வேண்டிய நேரத்துக்கு வெகு முன்னதாகவே, "அம்மா, கமலா! இதோ ஒரு இடத்துக்குப் போய்ட்டு வந்துடறேன்!" என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

அன்று மாலையில் பல சிநேகிதர்கள் — ஆண்களும் பெண்களும் — வர, வீடு முழுவதும் ஒரே குதூகலப்பட்டது. பிறந்த குழந்தைக்குப் பரிசுகள் வந்து குவிந்தன. ஆனாலும் அப்போது அம்மாமி மட்டும் அங்கே இல்லாதிருந்தது கமலாவின் மனத்தை வேதனை செய்து கொண்டிருந்தது.

வீட்டின் கொம்மாளத்திலேயே அவள் மனம் ஈடுபடவில்லை. டாக்டர் எவ்வளவோ கூறியும் அவள் சமாதானம் அடையவில்லை. அத்துடன், மறுபடியும் அம்மாமி — தன் தாய்க்கும் மேலான அம்மாமி — திரும்பி வராமலேயே நின்று விடுவாளோ என்ற சந்தேகம் அவள் உள்ளத்தைத் திருகியது. தான் ஏதே



னும் தவறு செய்திருக்கக் கூடுமோ என்று அதற்கு முன் — அம்மாமி வீட்டில் தங்கியிருந்த சமயத்தில்—நடந்த நிகழ்ச்சிகளின் நிழலை யெல்லாம் துருவிக் கொண்டிருந்தான். அவன் மனம் மேன்மேலும் குழம்பியது.

அடுத்த நாள் காலையில் அம்மாமி திரும்பி வந்தவுடன் கமலா அளவற்ற ஆனந்தத்தில் வாய் புதைத்து நின்றாள். பேசும் நிலை வருவதற்குச் சிறிது நேரமாயிற்று. அந்த நிலை வந்தவுடன், "ஏன், அம்மாமி! செத்து முழுக்க என்னைத் தவிக்கவிட்டுட்டுப் போயிட்டேளே!" என்று நெஞ்சை யடைக்கும் துக்கத்தோடு கேட்டாள். கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது.

"கமலா! பிரமாதமா இதுக்கு இப்படி அழறயே, அசடு மாதிரி! அதுதான் இப்போ வந்துட்டேனே! அழாதே; கைக் குழந்தைக்காரி அழக் கூடாது!" என்று அம்மாமி பழைய அன்புடன் தலை மயிரைக் கோதிய வண்ணம் கமலாவைத் தேற்றினாள்.

"அம்மாமி! உங்க மனசிலே ஏதோ குறை யிருக்கு. இல்லாத போனா பொறந்தியார் கண்ணுலே படாமயே இப்படி நீங்க ஒளிஞ்சுக்க மாட்டேள். தொட்டிலிடச்சே பத்துப் பேர் வருவான்னுதான் நீங்க ஆத்தை விட்டே போயிட்டேள்னு சொல்லிக் கிறேன். அப்படி என்ன உங்க மனசைச் சங்கடப் படுத்தற விஷயம்? நான்



ஒங்க பெண் மாதிரி யிருக்கேனே, என்கிட்ட சொல்லக் கூடாதா?" என்றாள் கமலா.

"அதெல்லாம் ஒண்ணுமில்லேடியம்மா! நீயும், தங்கம் மாதிரி குழந்தையுமிருக்கச்சே எனக்கு என்ன குறை யிருக்கப் போறது!" என்று அம்மாமி மழுப்பியதும், "அதெல்லாம் இல்லே, நீங்க சொல்ல வேண்ணு உங்களை இன்னிக்கி விடப்போற தில்லே!" என்று கமலா கெஞ்சுதலாக அம்மாமியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டாள்.

கைக் குழந்தைக்காரியின் மனதில் ஒரு வித ஆயாசமும் இருக்கக் கூடாதென் றெண்ணி, அம்மாமி தன் துயர வாழ்க்கையின் அந்தரங்கத்தைக் கமலாவுக்கு விளக்கினாள்.

• • •

சரஸ்வதி அம்மாமிக்குக் கலியாண மானவுடன் பல கஷ்டங்களும் ஆரம்பித்து விட்டன. வறுமையின் காரணமாகப் பெண்ணை எங்கேனும் தள்ளிவிட வேண்டு மென்ற கவலையில் அவளுடைய பெற்றோர் அவளை ஒரு பணம் படைத்த தூர்த்தன் காலடியில் தள்ளி விட்டனர். அவளுடைய ஏழைப் பெற்றோர் உயிருடன் இருக்கும் வரையில் அவன் அவளை அழைத்துக் கொள்ளவே யில்லை. பெண்களைப் போல் ஆண்களையும் பாரபட்ச மின்றிக் கண்டிக்கும் சக்தியும் நேர்மையு மற்ற சமூகம் அவளை 'வாழா வெட்டி' யென்று இடித்துக் கூறி, அவள் மண்டையை உருட்ட ஆரம்பித்தது. ஊர் வம்பு பொறுக்காமலும், பெற்றோரின் மறைவாலும் அவளே ஒரு நாள் தன் கணவன் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டாள்.

இதற்குள் அவள் கணவன் பணத்தைக் கண்டபடி யெல்லாம் வாரி யிறைத்து உடலையும் உள்ளத்தையும் பாழாக்கிக் கொண்டு விட்டான். நாளடைவில் தீராத நோயாகப் படுக்கையில் விழுந்து விட்டான். கணவனின் பயங்கரமான வியாதி பெண்ணுள்ளத்தைக் கரைத்தது. தனக்கு அவன் அக்காலத்தில் செய்த அழிக்க முடியாத அநீதியையும் அறவே மறந்து அவனுக்குச் சிசுருஷை செய்ய முனைந்தாள் 'அம்மாமி'. கடமையில் தோன்றிய தொண்டு நாளடைவில் அன்பாக மாறத் தலைப்பட்டது. ஆனால் இது அவள் வரைக்கும்தான். சபலத்தில் தோய்ந்த அவன் மட்டும் பழைய பொக்லாக் கதியிலேதான்

சென்று கொண்டிருந்தான். தனக்குத் தேவையான உதவிகளை அதிகாரத்துடனும் வெறுப்புடனும் அவளிடமிருந்து பெற்றுக் கொண்டான். ஒரு வேளைகூட அவன் அவளுடன் சௌஜன்யமாகப் பேசவில்லை.

அன்று காலை வழக்கமாக வரும் டாக்டர் அவனுடைய தேகஸ்திதியை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தார். இதயம் வெகு பலவீனமாக இருந்தது. டாக்டர்களுடைய வழக்கத்திற்கும் விரோதமாக அவர் முகத்தில் கவலையைத் தேக்கி உதடுகளைப் பிதுக்கிக்கொண்டது. 'அம்மாயி'யின் இதயத்தில் பேரிடிவிழச் செய்தது. அவசியம் நேர்ந்தால் தம்மைக் கூப்பிடும்படி அவர் கூறிச் சென்றது, அவள் திகைப்பை இன்னும் அதிகரித்தது.

குமுறிக்கொண்டு வந்த அழுகையைத் தொண்டைக்குள்ளேயே அழுத்திக் கொண்டு, அழிந்திருந்த குங்குமப் பொட்டை மறுபடியும் இட்டுக்கொண்டு, கணவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். நடுங்கிக்கொண்டிருந்த அவளுடைய வலது கை அவன் நெற்றியைப் பரிதாபமாகத் தடவியது. அவ்வளவுதான் அவனுக்கு வந்துவிட்டது கோபம். அவன், வாயில் வந்தவாறெல்லாம் இரைந்து அவளை வெளியே சென்று உட்கார்ந்திருக்குமாறு கர்ஜித்தான். பலவீனம் அதிகமாகிவிடப் போகின்றதே என்ற கவலையில் அவள் மௌனமாக அறையை விட்டு வெளியேறினாள். பிறகு வெகு நேரம் வரை அவனுடைய வாய் விஷ வார்த்தைகளைக் கக்கிக் கொண்டேயிருந்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு, அவள் கணவன் பழைய அதிகாரத் தோரணையில் காப்பி கொண்டு வருமாறு கூச்சலிட்டான். 'அம்மாயி' பதில் சொல்லாமலேயே காப்பி தயார் செய்ய உள்ளே சென்றாள். மறுபடியும் பயங்கரமான கூச்சல், காப்பி வேண்டுமென்று! அந்தச் சத்தத்தின் பரபரப்பில், "இதோ கொண்டு வரேன்!" என்று கம்மிய குரலில் அவள் பதில் சொன்னது, அவன் காதில் விழவில்லை போலும். "அடி, ராட்சஸி! பதில் சொல்லக்கூட முடியலியோ?" என்று ஓங்கிய கையுடன் ரௌத்திராகாரமாக அவன் படுக்கையை விட்டு எழுந்தான். மறு கணத்தில் படுக்கையிலேயே விழுந்து விட்டான். அவள் ஓடிச்சென்று அவனைப் பிடித்துக் கொண்டதற்குப் பலனாக அவள் கன்னத்தில் ஒரு பேயறை விழுந்தது. "ஓடி, படுபாவி! டாக்டரை அழைச்சிண்டு வா! என்னை என்னவோ பண்றது!" என்று அவன் கூறி முடிப்பதற்குள் அவள் தெருவுக்கு வந்து விட்டாள்.

சோதனைபோல் வழக்கமாக வரும் டாக்டர் ஏதோ அவசர காரியமாக வெளியூர் சென்று விட்டார். அவள் மனம் பதைத்தது. கடைசியில் யாரோ ஒரு டாக்டரை, அவர் காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி அழைத்து வந்தாள். பிறர் பார்க்கும் 'கேஸை'த் தான் பார்க்க முடியாது என்று பிடிவாதம் செய்த அச் சிடுமூஞ்சி டாக்டர் வழி முழுவதும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே வந்தார்.

டாக்டர் நோயாளியைப் பரிசோதித்தார். "ஆமாம், ஏன் இப்படி மார்பு படபடன்னு அடிச்சுக்கிறது? என்ன செய்தேள்?" என்று அவர் நோயாளியைக் கேட்டவுடன், அந்தக் கிராதகன், "அதோ நிக்கறாளே, அந்தப் பாவிதான் என்னைக் கொன்னுட்டா! ஒரு வாய் காப்பி கேட்டேன்; போட்டுத் தரலே! உடனே நானே போட்டுக்கலாம்னு எழுந்துண்டேன்; அப்படியே விழுந்துட்டேன்!" என்று திணறித் திணறிப் பேசினான்.

'அம்மாயி'யை அந்த இரக்கமற்ற டாக்டர் ஏற இறங்கப் பார்த்தார், இப்படியும் ஒரு பாதகியிருப்பாளா வென்று! கவலையில் வாயடைத்து நின்ற அவளைக் கணவனின் குற்றச் சாட்டு கற்சிலையாக மாற்றி விட்டது. அவர்களுடைய குடும்பத்தின் ரகசியத்தை அறியாத அந்த டாக்டர் ஏதோ 'இஞ்ஜெக்ஷன்' செய்துவிட்டு, "ஹூம்! இப்படி அநியாயமா அவரைக் கொன்னுட்டேளே!" என்று அவளைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

அடுத்த விநாடி, ஓர் உத்தமிக்கு இவ்வளவு துரோகம் செய்த பாவியிடம் இனியும் தங்குவது பாவம் என்பதுபோல் உயிர் அவன் உடலைவிட்டு நீங்கிவிட்டது.

அன்று அப் பாதகனுக்கு அநுகுணமாக டாக்டர் பேசியது ஓர் அபாண்ட அபவாதமாக மாறி ஊரெல்லாம் காட்டுத் தீ போல் பரவிவிட்டது. அன்று முதல் சரஸ்வதி யென்ற அம்மாயியின் அழகிய பெயர் அழிந்து, "ஆம்படையானைக் கொன்றவள்!" என்ற புதுப் பெயர் அவளுக்குக் கிட்டியது!

அவள், தன் கணவனின் வீட்டைவிட்டுக் கிளம்பி வெகு நாட்களாகியும், அபவாதம் எங்கே தன்னைத் துரத்திக் கொண்டு ஊர் ஊராக வருமோ என்ற பீதியில் எந்த ஊரி

னும் அதிக நாட்கள் தங்குவதில்லை. அதே பயத்தில் அவள் ஒருவர் முன்னிலையிலும் வருவதுமில்லை. டாக்டர் வீட்டில் தன்னைக் காணும் யாரேனும் அங்கேயும் அபவாதத்தைக் கிளப்பிப் பிள்ளைத்தாய்ச்சிக்கு உதவி செய்ய முடியாமல் தடுத்து விடுவார்களோ என்று பயந்தே அவள் அந்த வீட்டிலும் ஒளிந்து கொண்டிருந்தாள். புண்யாஹவாசனத்தன்று அசோகர் வருவார்களென்று அறிந்தே முன்னெச்சரிக்கையுடன் வெளியே சென்றுவிட்டாள்!

* * *

மேற் கூறிய அம்மாமியின் சோகக் கதையைக் கேட்டுக் கமலா கண் கலங்கிய போது, டாக்டர் பதட்டத்துடன் உள்ளே வந்தார். "ஐயோ! இத்தனை கதையையும் அவர் கேட்டிருப்பாரோ?" என்ற சந்தேகம் அம்மாமியின் உள்ளத்தில் எழுந்து அடங்குவதற்குள், "ஐயோ! அத்தனையும் கேட்டேன், அம்மாமி! ஆகா! உங்களுக்கா அந்த அபவாதத்தை நான் கட்டிவிட்டேன்?" என்று உணர்ச்சியோடு அலறினார் டாக்டர். கமலாவும் அம்மாமியும் விஷயம் விளங்காமல் விழித்துக் கொண்டிருந்த போது, "அம்மாமி! அன்னிக்கு ஜிடுஜிடுத்தன்று உங்க ஆத்துக்கு வந்தது நான்தான். பிறகு அந்தக் காப்பி விஷயத்தை எவனோ ஒருவனிடம் சொன்னதுதான் அபவாதமா ஊரெங்கேயும் பரவிடுத்து!" என்று டாக்டர் பச்சாதாபத்துடன் கூறினார்.

கமலாவின் உடல் வெட்கத்தால் குன்றியது. "பாவம்! அப்போது எங்கள் குடும்ப சமாசாரம் தெரியாது, உங்களுக்கு! அது ஒரு தப்பா?" என்றாள் அம்மாமி.

அதற்குப் பிறகு அவர்கள் வார்த்தையைத் தட்டாமல் அம்மாமி வெகு நாட்கள் அவர்களுடன் இருந்து, இரண்டு வருஷத்திற்கு முன்னர்தான் நிம்மதியாக இறந்தாள்.

* * *

"இப்போ என்ன சொல்றே, ராஜம்! இந்த லோகத்திலே 'அபவாதம்' எப்படியெல்லாம் கிளம்புறது, பார்த்தாயா?" என்றாள் கமலா.

ராஜத்தினால் ஒருவிதப் பதிலும் சொல்ல முடியவில்லை.

இறந்த அம்மாமியின் புனித ஞாபகத்தைப் போற்றுவதுபோல் அங்கே சிறிது நேரம் நிசப்தம் நிலவியது.

No.

ஜாலசேஷ்டம்

கனவான் :—போடா, என்னிடம் காலணாவே இல்லை; ரூபாய்தான் வைத்திருக்கிறேன்.

பிச்சைக்காரன் :—இப்படிப் போடுங்க ரூபாயை, நான் தரேன் உங்களுக்கு அறுபத்து மூன்று காலணா!

★

மாமா :—அம்பி, உங்கள் பள்ளிக் கூடத்திலே புதிதாக ஒரு உபாத்தியாயர் வந்திருக்கிறாராம்; பையன்களை வெள்ளாம் திட்டுகிறாராமே! அவர் பேர் என்னடா?

அம்பி :—ஆசீர்வாதம், மாமா!

★

ஒரு நடிகை தன் வைர மாலையை ஜாக்கிரதையாகக் களவு போகாமல் வைத்திருக்க வழி கண்டு பிடித்தாள்.

"இது வெறும் இமிடேஷன். அசல் வைர மாலைகள் பாங்கியில் இருக்கின்றன"—என்று ஒரு குறிப்பு எழுதி அதை அந்த வைரமாலையோடு மேஜை டிராயரில் வைப்பது வழக்கம்.

ஒரு நாள் அந்த வைர மாலை களவு போய் விட்டது. ஆனால் அங்கே வேறொரு குறிப்புக் காணப்பட்டது:— "இந்தப் போலி வைர மாலையே போதும். ஏனென்றால் நானும் அசல் திருடன் அல்ல!"

★

அவர் :—மன்னிக்கணும்; நேற்று உங்கள் வீட்டில் நடந்த விருந்துக்கு நான் வரமுடியாமற் போய் விட்டது. அவசர காரியமொன்று வந்து சேர்ந்தது!

இவர் :—ஓஹோ! நீங்கள் வரவில்லையா? நான் கவனிக்கவே யில்லையே!

★

ஒருவர் (கடைக்காரனைப் பார்த்து):—மிஸ்டர், 'காதலின் கண்கள்' என்னும் நாவல் ஒன்று வேண்டும்.

கடைக்காரர் :—என்ன, 'காதலின் கண்க'ளா? நான் கேள்விப் பட்டதுகூட இல்லையே! அதை எழுதியது யார்?

ஒருவர் :—ஏன், நான்தான்!

★

மானேஜர் :—என் ஐயா, உமது மைத்துனன் கல்யாணத்துக்குத்தானே போக வேண்டும் என்று லீவு கேட்கிறீர்? அதற்குத் தான் இன்னும் பத்து நாள் இருக்கிறதே! இப்பவே என்னத்துக்கு லீவ்?

குமாஸ்தா :—என்ன ஸார், தெரியாதது மாதிரி கேட்கிறீர்களே? இங்கிருந்து வீட்டுக்குப் போவதற்கு 'க்யூ'வில் நின்று பஸ்ஸைப் பிடிக்க வேண்டும். அங்கே போய் மூட்டை, முடிச்சு எல்லாம் கட்டித் தயார் செய்து கொண்டு, திரும்பி ஸ்டேஷனுக்குப் போகப் பஸ் கிடைக்க வேண்டும். ஸ்டேஷனில் டிக்கட் கிடைத்து, ரயிலில் இடமும் கிடைத்து ஊர் போய்ச் சேரப் பத்து நாள் சாவகாசமாவது வேண்டாமா, நீங்களே சொல்லுங்கள்!

கல்கி சிறுகதைப் போட்டி 1946

1946-ம் வருஷத்துச் சிறுகதைப் போட்டிக்கு வந்த கதைகளில் பரிசுக் கதைகள் போக, பிரசுரத்துக்கு எடுக்கப்பட்ட கதைகள்:—

1. தேவகி
—என். சுப்பிரமணியன், சைதாப்பேட்டை.

2. அதிர்ஷ்டசாலி
—லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி, கோட்டயம்.

3. கான்ஸ்டேபிளும் காதலும்
—சாமுவேல் ஆசீர்வாதம், நாசரேத்.

4. அந்தி பூத்தது
—ஆர். ஆறுமுகம், திருச்சி.

5. சிவசைலம்
—"கவிஞு", சேலம்.

6. தனராஜின் சங்கடம்
—சாமுவேல் ஆசீர்வாதம், நாசரேத்.

7. ரோஹிணி எங்கே?
—பி. எஸ். சேஷாத்ரி, மாதுங்கா, பம்பாய்.

8. மல்லம்மா
—கனகம், வேலூர்.

9. கோழிப் பந்தயம்
—அரு. ராமநாதன், கண்டனூர்.

10. அழகும் விதியும்
—"வேகாமு", திருவல்லிக்கேணி.

11. கர்வமும் பங்கமும்
—"அநுத்தமா", சென்னை 14.


12. பாம்பும் குழலியும்
—கிருஷ்ணஸ்வாமி, திருவல்லிக்கேணி.

13. வாக்குப் பலித்தது
—"செம்பா", எழும்பூர்.

14. மீன் சாமியார்
—மா. சி. கல்யாணசுந்தரம், கோடைக்கானல்.


15. திருகுப் பூ
—எம். என். சுப்பிரமணியன், ஹைதராபாத்.

"என்னை மன்னிக்கவும்!"



குழந்தைகளுக்கும் கூட!

"ஆரோக்கியத்திற்கு உட்புற சுத்தமே முதலாவது!"



"உட்புற சுத்தமே ஆரோக்கியத்திற்கான முதல் விதி" என்ற சாதாரண உண்மையை எவரும் தெரிந்து கொள்ளாமலில்லை. இவ் உண்மையை ஒரு இளமையான உள்ளத்தில் பதிய வைப்பது வெகு சுலபம். ஏனெனில் உட்புற சுத்தமென்பது, தேவையானபோது ஆண்ட்ரூஸை சரிவர அருந்தி வரவேண்டுமென்பதே—நுரையுடன் பொங்கும் இவ்வாரோக்கியமான பானத்தை குழந்தைகள் மிகுந்த ஆவலுடன் அருந்துகின்றன. ஆண்ட்ரூஸை அருந்த அவைகளை கட்டாயப்படுத்த வேண்டாம்; அருந்தும் ஒவ்வொரு டம்ளரும், மிருதுவாக, ஜாக்கிரதையாக பூரணமாக உடலை சுத்தமாக்குகிறது என்பதை அறிவது நல்லது. மனிதர்களோடு மட்டுமின்றி, குழந்தைகளுக்கும் ஆண்ட்ரூஸ் ஓர் இன்றியமையாத மலமிளக்கி. சிறிய அளவில் எப்போதும் உபயோகித்து வருவது போதுமாதலால் வழக்கமாக மாறி விடாது. ஆண்ட்ரூஸ் ஆரோக்கியத்தை அளிக்கும் வழி இதுவே.

முதலில்: ஆண்ட்ரூஸ் வாயையும் நாக்கையும் சுத்தப்படுத்தி சுசிதமாக்குகிறது.

அடுத்தபடி: ஆண்ட்ரூஸ் வயிற்றை சரிப்படுத்தி புளிப்பு சீரை நிறுத்துகிறது.

பிறகு: ஆண்ட்ரூஸ் ஈரலை சேர்மையாக்கி கப்புசத்தைப் போக்குகிறது.

கடைசியாக: உட்புற சுத்தத்தை செய்து முடிக்க ஆண்ட்ரூஸ் மெதுவாக வயிற்றை சுத்திகரிக்கிறது. அது, அஜிப்படுத்தும் விஷங்களை அப்புறப்படுத்தி, மனச் சிக்கலைப் போக்கி, ரத்தத்தை குணப்படுத்தி குளிர்ச்சியாக்குகிறது.

"டின்களிலும் கார்டன்களிலும் பாக் செய்யப்பட்டு எங்கும் புதுண்டாக்குகள் இருக்கின்றன."

ANDREWS

ஆண்ட்ரூஸ் லிவர் ஸால்ட்

குளிர்ச்சியூட்டுகிறது – களைப்பாற்றுகிறது – ஊக்கமூட்டுகிறது



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

ரமாநாத் வீட்டுக்கு வரும் பொழுது மணி ஒன்பது அடித்து விட்டது. தயாநாத பாபு அவனைப் பார்த்ததும், "பொழுது விடிந்ததும் விடியாததுமாக நீ எங்கே புறப்பட்டுப் போய் விட்டாய்?" என்று கேட்டார்.

"ஹெட் க்ளார்க்கின் வீட்டுக்குப் போயிருந்தேன்."

"ஏதாவது லைப்ரரிக்குப் போய் அரை மணி ஒரு மணி நேரம் படிக்கக் கூடாதோ? வம்பிலேயே இப்படிப் பொழுதை யெல்லாம் போக்கி விடுகிறாயே! பரீக்ஷைக்குப் போகாவிட்டாலும் அறிவை விருத்தி செய்து கொள்ளுவதற்காகவாவது கொஞ்சம் படிக்கக் கூடாதா? ஒரு சாதாரணக் கடிதாசி எழுது என்றால் ஓடி ஒளிந்து கொள்ளுகிறாய். பள்ளிக்கூடப் படிப்பு என்ன படிப்பு? கவைக்கு உதவாத படிப்பு!— உன்னைப் பற்றி என்னவெல்லாமோ கேள்விப் படுகிறேன். அது மனதுக்கு ரொம்பவும் வருத்தமாக இருக்கிறது. உனக்கு நல்லதைச் சொல்ல வேண்டியது என் கடமை. 'நீ கெட்ட வழியில் ஒரு தம்பிடி கூடச் சம்பாதிக்கக் கூடாது' என்பது என் அந்தரங்க அபிப்பிராயம். நான் வேலை பார்க்க ஆரம்பித்து முப்பது வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது. நான் நினைத்திருந்தால், ஆயிரக்கணக்காகச் சம்பாதித்திருக்கலாம். ஆனால், ஒரு தம்பிடி கூட நான் கெட்ட வழியில் சம்பாதிக்கவில்லை என்று சத்தியம் செய்யக் கூடத் தயார். உனக்கு இந்தத் துர்ப் பழக்கம் எங்கிருந்து வந்தது என்றுதான் எனக்குப் புரியவே யில்லை!" என்றார் தயாநாத பாபு.

இதைக் கேட்ட ரமாநாத் மிக்க கோபத்துடன், "இப்படியெல்லாம் உங்களிடம் கதை கட்டி விட்டவன் யார் என்று சொல்லுங்கள்! அவனை ஒரு கை பார்த்து விட்டு மறு காரியம் பார்க்கிறேன்!" என்றான்.

"யார் சொன்னால் உனக்கு என்ன? நான் கேள்விப்பட்டது உண்மைதானா, அல்லது பொய்யா?"

"பொய்தான்."

"நிஜமாகத்தான் சொல்லுகிறாயா?"

"ஆமாம்."

"நிஜமாகச் சொல்லு. நீ யாரிடமும் கைக் கூலி வாங்குவதில்லையா?"

"கைக்கூலி லஞ்சமாகிவிடுமா? அவர்களாக இஷ்டப்பட்டுக் கொடுத்தால் வாங்குவது உண்டுதான். அதுமாதிரி எல்லோரும்தான் தருகிறார்கள். நான் கேட்டு வாங்கினால்தானே, அதற்கு?"

"கேட்டு வாங்கினால் என்ன? அவர்களாக இஷ்டப்பட்டுக் கொடுத்தால் என்ன? லஞ்சம் லஞ்சம்தானே?"

"இதற்கெல்லாம் பதில் சொல்ல என்னால் முடியாது. கைக்கூலி நான் வேண்டுமானால் வாங்கிக்கொள்ளாமல் இருக்கலாம். ஏழும் எட்டும் சம்பளம் வாங்கும் பியூன்களைத் தடுக்க நான் யார்? நீங்களே சொல்லுங்கள்" என்றான் ரமாநாத்.

தயாநாத பாபு பேச்சில் ஒரு அருவருப்புத் தொனிக்க, "சொல்ல வேண்டியதை நான் சொல்லிவிட்டேன். நீ கேட்டால் கேள்; கேட்காவிட்டால் போ" என்று சொல்லிவிட்டு, ஆபீஸுக்குப் புறப்பட்டு விட்டார்.

"நீங்கள் லஞ்சம் வாங்காமல் இருந்து, என்ன புண்ணியத்தையும் சுகத்தையும் கண்டு விட்டீர்கள்? எப்பொழுது பார்த்தாலும் 'பணம், பணம்' என்று பேயாய்ப் பறக்கிறீர்களே! அதுதானே மிச்சம்! உங்களால் குழந்தைகளைச் சரிவரப் படிக்க வைக்க முடியவில்லை; உடுக்கத் துணி வாங்கித்தர முடியவில்லை. அப்படியிருக்கும் பொழுது இப்படியெல்லாம் வீண் தற்பெருமை அடித்துக் கொள்ளுவானேன், என்று கேட்டுவிடலாமா?" என்றுகூட ரமாநாத்துக்குத் தோன்றியது.

ரமாநாத் உள்ளே போனதும், அவனைப் பார்த்த அவனுடைய தாயார், "என் ரமா, காலையில் எழுந்திருந்ததும் எழுந்திருக்காததுமாக எங்கே போய்விட்டாய்?— இதற்காகத்தான் அப்பா உன்னைக் கோபித்துக் கொண்டிருந்தாரா?" என்று கேட்டாள்.

"இதற்காகக் கோபித்துக் கொள்ளவில்லை. 'கைக்கூலி வாங்காதே; பாபம் சம்பவிக்கும்; அவமானப்பட நேரிடும்' என்றெல்லாம் உபதேசம் செய்து கொண்டிருந்தார்."

"ஆமாம், 'நீங்கள் யோக்கியமாக நடந்துகொண்டு என்ன கீர்த்தியைச் சம்பாதித்து விட்டீர்கள்? அரை வயிற்றுச் சோற்றுக்கு நீங்கள் பட்டபாடு எங்களுக்குத் தெரியாதா?" என்று நீ அவரைத் திருப்பிக் கேட்டு விடுவதுதானே?"


"கேட்டு விடலாம் என்று தான் நினைத்தேன். அப்புறம் அவர் கோபித்துக் கொண்டு விட்டாரானால் என்ன செய்வது என்று எண்ணிப் பேசாமல் இருந்து விட்டேன். அவர் அரைக் காசுக்குத் திண்டாடிய திண்டாட்டம் எனக்குத் தெரியாதா? அவரைப்போல நானும் திண்டாட வேண்டுமா? அவருக்கு வாங்க வகை தெரியவில்லை; ஆண்டி வேஷம் போட ஆரம்பித்து விட்டார்! அவரைப் போலவா, நான்! வியாபாரிகளிடம் பணம் பறிப்பது என்றால் மூளை வேண்டும், மூளை! சக்குச் செட்டிகளான வியாபாரிகளிடமிருந்து லேசில் பணம் கழலுமா? பணம் கழற்ற வழி தெரியவில்லை, உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டார்! வேறென்ன செய்வார், பாவம்!" என்றான் ரமாநாத்.

"ஆமாம், நீ சொல்லுவது வாஸ்தவம்தான், ரமா! வாங்கத் தெரிந்தவர் வாங்காமல் இருப்பாரா? இவருக்கு வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு, நம்மோடு சக்கரவட்டமாகப் பேசத் தெரியுமே தவிர, வெளியிலே போய்க் கெட்டிக்காரத்தனமாக, நாலு காசு சம்பாதித்துக் கொண்டு வருவோம் என்று தெரியாது. அதனால்தான் அப்படிப் பேசுகிறார்" என்று ஆமோதித்தாள் ஜாகேசவரி.

* * *

ரமாநாத் ஆபீஸுக்குப் போகுமுன், 'டிரஸ்' செய்து கொள்ளுவதற்காக மாடிக்குப் போனான். பத்மா அவன் கையில் மூன்று 'கவர்'களைக் கொடுத்துத் தபாலில் சேர்க்குமாறு சொன்னாள். அவன் அவைகளை வாங்கிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு, ஆபீஸுக்குப் புறப்பட்டான். போகும்பொழுது வழியில் அவனால் அதைப் பிரித்துப் பாராமல் இருக்க முடியவில்லை. பத்மா தன் மூன்று தோழிகளுக்கும் தனக்கேற்பட்ட இன்னல்களையும், தன் மனத்துயரத்தையும் விவரித்து எழுதியிருந்தாள். 'வாழ்க்கையே வெம்பாவி விட்டது. மனதுக்கு ஒரு நிம்மதியே கிடையாது. கணவரைச் சந்தோஷப்படுத்தும் பொருட்டு, ஏதோ சிரித்துப் பேசுகிறேனே தவிர, மனது எப்பொழுதுமே அழுத்தான் செய்கிறது. நான் யார் வீட்டுக்கும் போவதும் இல்லை; வருவதும் இல்லை. இந்த மனத்துயரம் என் பிராணனையே வாங்கி விட்டுத்தான் மறு காரியம் பார்க்கும் போலத் தோன்றுகிறது. 'பணம் சேர்த்துக் கொண்டிருக்கிறோம்; எந்தத் தட்டான் தேவலை என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்; என்ன நகை முதலில் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்' என்றெல்லாம் இவர்கள் ஏதேதோ பசப்பு வார்த்தைகள் சொல்லுகிறார்களே தவிர, ஒரு நகையாவது செய்து போடுபவர்களாகத் தோன்றவில்லை'— என்று ஒரே விஷயத்தைக் கூட்டியும் குறைத்தும் பத்மா மூன்று கடிதங்களிலும் எழுதியிருந்தாள்.

ரமாநாத் மூன்று கடிதங்களையும் படித்து விட்டுத் தன் பையிலேயே போட்டுக் கொண்டான். தபாலாபீஸ் வழியாகப் போகும் பொழுது, ரமாநாத்துக்குக் கடிதங்களின் நினைவு இல்லாமல் போகவில்லை; ஆனால் வேண்டுமென்றே அவைகளைத் தபாலில் சேர்க்காமல், ஆபீஸை நோக்கி நடந்தான். 'நான் இன்னும் இவளை ஏமாற்றுவதாகவே தானே எண்ணுகிறாள்! எப்படி இவளுக்கு நான் நம்பிக்கை ஊட்டுவது? என் சக்திக்கு உட்பட்ட விஷயமாயிருந்தால், கூடை கூடையாக நகைகளைக் கொண்டு போய் அவள் முன்னால் வைத்துவிடுவேன். இல்லா



விட்டால், ஒரு பெரிய நகைக் கடைக்கு அழைத்துப் போய், 'உனக்கு வேண்டிய மட்டும் நகைகளை எடுத்துக் கொள்ளு' என்றாவது சொல்லுவேன். அவளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த மன வேதனை, என் மீதிருந்த நம்பிக்கையையும் அல்லவா அவளிடமிருந்து அபகரித்துக் கொண்டு விட்டது! நான் என் நிலைமையைச் சரியாக உணராமல், தற்பெருமை அடித்துக் கொண்டதனால்தானே இந்த வினையெல்லாம் வந்தது! இப்படியெல்லாம் நடக்குமென்று தெரிந்திருந்தால், நான் ஏன் இப்படியெல்லாம் நடித்திருக்கப் போகிறேன்! பேசாமல் வாயைக் கட்டித் தைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டேனா? பத்மா அடக்கவொண்ணாத மனத் துயரத்தினால் இப்படி வாடி மடிந்துகொண்டிருக்கும் பொழுது, நான் 'கடன் வாங்கக் கூடாது' என்ற கொள்கையைக் கடைப் பிடிப்பதாவது? கடையில் விபரீதமாக ஏதாவது ஒன்றுக்கொன்று நடந்து விட்டால்......?' என்று அவனுடைய மனம் எண்ணத் தகாததையெல்லாம் எண்ணியது. அவன் முதல் தடவையாக, உண்மையான மனதுடன், 'பகவானே, எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடு. ஆனால் என் பத்மாவை மட்டும் என்னிடமிருந்து பிரித்துவிடாதே! அவள் உயிர் பிரிவதற்கு முன்னால் என் உயிர் போய்விட வேண்டும். ஈசா, என் எளிய நிலைமைக்கு இரங்கு, இரங்கு' என்றெல்லாம் கடவுளை வேண்டிக் கொண்டான்.

ஆனால் அவனுக்குப் பத்மாவின் மீதும் கோபம் கோபமாக வந்தது. 'தன் மனதில் உள்ளதை என்னிடம் சொல்லுவதற்கு அவளுக்கு என்ன கேடு? நான் ஒரு மனிதனாகத் தோன்றவில்லை; தோழிகளிடம்தான் சொல்லிக்கொள்ள வேண்டுமாக்கும்! என்னிடமே அவள் இப்படி ஒளித்தால்...? இருக்கட்டும், சொல்லுகிறேன்!' என்று அவன் தன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

ஆபீஸ் வராந்தாவில் சாமான்கள் தரையில் சிதறப் பட்டுக் கொண்டிருந்தன.

மேஜையின்மேல் ரூபாய்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் ரமாகாந் கவலையில் மூழ்கி யிருந்தான்! நாம் எதற்கு இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக் கொண்டோம்? நம் மேல்தான் தப்பு. வீட்டு நிலைமை, நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்பொழுது, நாம் அல்லவா 'கல்யாணம் செய்து கொள்ள முடியாது' என்று மறுதளித்திருக்க வேண்டும்! என்றெல்லாம் அவனுடைய மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அவனுக்கு ஆபீஸ் வேலையிலேயே மனம் செல்லவில்லை. ஆகையால் ஆபீஸ் நேரம் முடிவதற்கு முன்னாலேயே, பேசாமல் எழுந்து வீட்டுக்கு வந்து விட்டான்.

பத்மா அவனைப் பார்த்ததும், "என் கடிதங்களைத் தபாலில் சேர்த்து விட்டீர்களா?' என்று கேட்டாள்.

ரமாகாந் மறந்து விட்டவன்போலப் பாசாங்கு செய்து கொண்டு, "அடாடா, மறந்தே போய் விட்டேனே! சட்டைப் பையிலேயேதான் இருக்கிறது" என்றான்.

"நல்ல வேளை! அப்படியானால் என்னிடமே கொடுத்து விடுங்கள். தபாலில் போட வேண்டாம்."

"ஏன்? நாளைக்கட்டில் சேர்த்து விடுகிறேன்."

"வேண்டாம், வேண்டாம். ஏனென்றால் எழுதத் தகாத சில விஷயங்களை நான் எழுதியிருந்தேன். உங்களிடம் கொடுத்த பிறகு, 'நீங்கள் தபால்ல் சேர்க்காமல் இருக்க வேண்டுமே' என்று பகவானைக் கூட வேண்டிக் கொண்டேன். அந்தக் கடிதங்களில் உங்களைத் திட்டி எழுதியிருந்தேனுக்கும்!" என்று சொல்லும் பொழுதே பத்மாவுக்குச் சிரிப்பு வந்தது.

"நியாயம் தானே! கெட்டவன், மோசக்காரன், போக்கிரி இவர்களை யெல்லாம் திட்டுவதில் குற்றம் ஒன்றுமே இல்லையே!" என்றான் ரமாகாந்.

பத்மா நடுங்கிய குரலில், "நீங்கள் கடிதங்களைப் படித்து விட்டீர்களா, என்ன?" என்று கேட்டாள்.

ரமாகாந் சிறிதும் சங்கோசமின்றி, "ஆமாம். அது மன்னிக்க முடியாத குற்றமா?" என்றான்.

பத்மா பயந்த குரலில், "அப்படியானால், உங்களுக்கு என்னிடம் கோபமா?" என்று கேட்டாள்.

அதற்குமேல் பத்மாவால் பேச முடியவில்லை. அவளுக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டது. கண்களில் பெருகிய நீர் கன்னங்களின் வழியே ஓடி, படவைத் தலைப்பை நனைத்தது. சிறிது நேரம் கழித்து மெதுவாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "நான் செய்தது பெரிய குற்றம்தான். எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் என்னை உதறி மட்டும் தள்ளி விடாதீர்கள். நீங்கள் புறப்பட்டுப் போன பிறகு, 'என் எழுதினேம்' என்று நான் பட்ட மனத்துயரத்தைக் கடவுள்தான் அறிவார்" என்று மிகவும் வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னாள் பத்மா.

'ரமாகாந் தனக்கு நகைகள் செய்து போடும் விஷயத்தில் தன்னைக் காட்டிலும் அதிகமாகக் கவலை கொண்டிருக்கிறான்' என்பதைப் பத்மா அறியாமல் இல்லை. ஆனால் அந்த விஷயத்தைத் தன் தோழிகளுக்குத் தெரிவிப்பது அவளுக்குச் சிறிது கௌரவக் குறைவாகப்பட்டது. அதனால் தான் அவள் தன் தோழிகளுக்கு எழுதிய கடிதத்தில் தன் துயரத்தைச் சற்று அதிகப் படுத்தியே எழுதிவிட்டாள். 'சிநேகிதர்கள் தன் மீது அதிக அனுதாபம் காட்டமாட்டார்களா?' என்ற எண்ணத்தில் தன் துயரத்தை மிகைப் படுத்திச் சொல்லுவது மனித இயல்பு. இந்த வழக்கம் ஆண்களைக் காட்டிலும் பெண்களிடத்தில்தான் அதிக சகஜமாக இருந்து வருகிறது.

ரமாகாந் பத்மாவின் கண்ணீரைத் துடைத்த வண்ணம், "நான் உன்னைக் கோபித்துக் கொள்ளுவதற்கு, நீ என்ன குற்றம் செய்துவிட்டாய்? விருப்பம் நிறைவேறத் தாமதம் ஏற்பட்டால் ஏமாற்றம் ஏற்படுவது சகஜம்தானே! இது கூட எனக்குத் தெரியாதா? நீ அன்று என்னைத் தடுக்காமல் இருந்திருந்தால், இரண்டொரு நகைகளாவது கட்டாயம் நான் செய்து போட்டிருப்பேன். உன்னிடம் ஆலோசனை கேட்டேனே, அது என்மேல்தான் தப்பு. விருந்தாளியை இலையில் சாப்பிட உட்கார வைத்து, 'இன்னும் கொஞ்சம் சாதம் போடட்டுமா?' என்று கேட்டால் அவன் என்ன பதில் சொல்லுவான்? 'இன்னும் கொஞ்சம் வேண்டும்' என்று தோன்றினாலும், சங்கோசத்தில் 'வேண்டாம், வேண்டாம்' என்றுதானே சொல்லுவான்! ஆண்டவன் அருள் இருந்தால், கூடிய சீக்கிரம் ஏதாவது செய்து போட்டு விடுகிறேன்" என்றான்.

பத்மா கவலை தோய்ந்த முகத்துடன் அவனைப் பார்த்து, "கடனா வாங்கப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம்; கடன் வாங்குவதில் என்ன தப்பு? அதுவும் நானா வட்டிக்குக் கடன் வாங்கப்போகிறதில்லை. அப்படியிருக்கும் பொழுது ரொக்கம் கொடுத்து நகை வாங்கினால் என்ன; கடனாக வாங்கினால் என்ன? இரண்டும் ஒன்றுதானே! உலகத்துக் காரியங்களே கடனில்தான் நடக்கிறது. 'கடன் வாங்காமல் ஒருவன் இருக்கிறான்' என்று விரலை மடக்கு, பார்ப்போம்! கையில் வரும் பணம் எல்லாம் எப்படியோ கரைந்துதான் போய் விடுகிறது. ஒரு தம்பிடி மிச்சம் பிடிக்க முடிவதில்லை. அப்படியிருப்பதனால், கடன் வாங்கி நகைகளை வாங்கிவிட்டோமானால், அந்தக் கடன் கவலை, கையை இழுத்துப் பிடித்துச் செலவு செய்யச் சொல்லும். அதனால்தான் கடனாகவே நகைகள் வாங்கி விடலாம் என்றிருக்கிறேன்" என்றான் ரமாகாந்த்.

"நான் உங்களைக் கவலையில் ஆழ்த்த விரும்பவே இல்லை. நான் இனிமேல் வாய் திறந்து நகைப் பேச்சை எடுத்தால், என்னை 'ஏன்' என்று கேளுங்கள்."

"முன்னால்தான், எப்பொழுதாவது நீயாக நகைப் பேச்சை எடுத்திருக்கிறாயா, என்ன? நீ கேட்கவில்லை என்பதனால் என் கடமை தீர்ந்துவிடப் போகிறதா? நீ 'கடன்' என்றால் ஏன் இவ்வளவு பயந்து சாகிறாய்? 'பணம் சேரப்போகிறது' என்று பார்த்துக் கொண்டிருந்தால் இந்த ஜன்மாவில் சேராது போலிருக்கிறது. கடனாகவே வாங்கிப் பணம் கொடுத்து, ஒரு வருஷத்துக்குள் நாலைந்து நகைகள் செய்து போட்டு விடலாம் என்று தோன்றுகிறது."

"அப்படியானால் ஏதாவது ஒரு சின்ன நகை வாங்குங்கள்."

"அப்படித்தான் வாங்குவதாக உத்தேசம்" என்றான் ரமாகாந்த்.

அவன் கடைத் தெருவுக்குப் போகும் பொழுது நன்றாக இருட்டி விட்டது. பொழுது சாய்வதற்கு முன்னமே போனால், யாராவது நண்பர்களோ, தந்தை தயாநாத பாபுவோ பார்த்து விட்டால் என்ன செய்வது என்று அவனுக்கு உள்ளூற பயம். அவன் தான் செய்யப் போகும் காரியத்தைப் பரம ரகசியமாகவே வைத்துக் கொள்ள விரும்பினான். அதனால்தான் நன்றாக இருட்டின பிறகு கடைத் தெருவுக்குள் நுழைந்தான். (தொடரும்)



நல்ல ஆரோக்கியம் அடைவதின் ரகசியம்!...

உங்களின் குடல் சரிவர வேலை செய்து மலச்சிக்கல் ஏற்படாதிருந்தாலே, அதுவேதான் நீங்கள் நல்ல ஆரோக்கியம் அடைய மார்க்கம். மலச்சிக்கலின் காரணத்தால் சரீரத்தில் விஷமேற்பட்டு உங்களுடைய திரேக ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

சுலபமாக
மலமிளக்கும்
உன்னத சஞ்சீவி

போரோமின்ட்
லாக்ஸேடிவ் சூயிங் கம்

ரூ. 1—2—0, ரூ. 0—7—0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள்:

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 2.



அரைக்கீரை விதைத் தைலம்

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும். காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

தயாரிப்பவர்கள்:

டி. எஸ். ஆர். அண்டு கோ., கும்பகோணம்

●

மதராஸ் விடி ஏஜண்டுகள்:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ், பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும் சோல் ஏஜண்டு:

B. பாலபட்டாபி, வைசியாள் தெரு, கோயமுத்தூர்

Edited, Printed and Published by R. Krishnamurtay at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI ஜூன் 22, 1947 4 அணா

REGD. No. M. 4392

License No. 18
Licensed to post without prepayment



[illegible] 112, [illegible]
[illegible] 93, [illegible]

ராஜாஜியின் பிறந்த தினம்

ஆர். நரசிம்மன் எம். ஏ.

"பண்டித ஜவாஹர்லால் நேருவின் பிறந்த தினக் கொண்டாட்டம். ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் பேசுவார். ஸ்ரீ ஆதிகேசவலு நாயக்கர் தலைமை வகிப்பார். இடம்:—ஹிந்தி பிரசார சபை, மாம்பலம். மாலை 6-30 மணிக்கு"—என்று ஒரு சிறு விளம்பரத்தைப் பார்த்தேன்.

* * *

என்னை "ராஜாஜி பக்தன்" என்று தியாகராஜநகரில் எல்லோரும் அழைப்பார்கள். அதற்குத் தகுதி யுடையவனா என்று நான் சொல்வதற்கில்லை. ஆனால் ராஜாஜியின் பிரசங்கம் சென்னை நகரில் எங்கு நடந்தாலும் அதைக் கேட்பதற்குப் போகாமல் இருக்க மாட்டேன்.

மேற்படி ஜவாஹர்லால் நேருவின் பிறந்த தினக் கொண்டாட்டத்தின்போது நான் ராஜாஜியின் வீட்டுக்குப் போக ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று மாலை அவருடனேயே காரில் ஹிந்தி பிரசார சபைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

ஹிந்தி பிரசார சபையில் 'ஜே ஜே' என்று ஒரே கூட்டம். ஜவாஹர்லால்ஜியைப் பற்றிப் பேசும்போது ராஜாஜி தமாஷாகச் சொன்னார்: "சிறுவர்களாக இருப்பவர்களுக்கு ஒரு விஷயம். உங்களில் அநேகம் பேர் ஜவாஹர்லால்ஜியைப் பார்த்திருக்க மாட்டீர்கள். காந்திஜியைப் பத்திரிகைகளில்தான் பார்த்திருப்பீர்கள். நான் காந்திஜியைவிட 10 வயது சிறியவன். ஜவாஹர்லால்ஜியைவிட 10 வயது பெரியவன். ஆகவே வயதுக் கிரமத்தில் இரண்டு பேருக்கும் மத்தியில் நான் இருக்கிறேன்!"

• • •

காந்தி மகாத்மா உலகம் போற்றும் உத்தமர். பண்டித ஜவாஹர்லால் நேரு சிறந்த தேச பக்தர். அவர்களுடைய பிறந்த தினங்களை நாம் கொண்டாடுவது நியாயம். ஆனால் ராஜாஜி சிறந்த தேச பக்தராக இருந்தும், இந்தியாவின் உன்னத அரசியல் நிபுணராக இருந்தும், அவர் பிறந்த ராஜதானியில் மக்கள் அவருடைய பிறந்த தினத்தைக் கொண்டாடுவதில்லை. இந்த எண்ணத்தினால் என் மனம் சஞ்சலப்பட்டது.

கூட்டம் சிறப்பாக நடைபெற்று முடிந்ததும் ராஜாஜியுடன் நானும் கிளம்பினேன். எங்களுடன் ஸ்ரீ ஆதிகேசவலு நாயக்கரும் வந்தார். நாங்கள் வரும்போது ஒரு சம்பாஷணை நடந்தது. அது பின்வருமாறு:—

ராஜாஜி:—தேவலையே, ரொம்ப நன்றாய்க் கூட்டத்தை நடத்தினீர்களே!

நாயக்கர் (சிரித்துக்கொண்டே):—நான் தங்களுடைய பிரச்னையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நீங்களும் அதைக் குறிப்பிட வில்லை.

ராஜாஜி:—ரொம்ப நல்லது. இன்றைக்கு ஜவாஹர்லால்ஜியின் பிறந்த தினம் தானே? என்னுடைய பிரச்னையைப் பற்றி எதற்காகப் பேசவேண்டும்?

(அப்போது "ராஜாஜி வேண்டுமா வேண்டாமா?" என்னும் அழகான விவாதம் நடந்து கொண்டிருந்த காலம்.)

சிறிது நேரம் கழித்து நான் ராஜாஜியிடம், "தங்கள் பிறந்த தினம் எப்போது வருகிறது?" என்று கேட்டேன்.

ராஜாஜி:—என் பிறந்த தினம் எது வென்று எனக்கே தெரியாது. அதைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்?

நான்:—இந்தியாவிலுள்ள தலைவர்களின் பிறந்த தினங்கள் எல்லாம் விமரிசையாகத் தமிழர்கள் கொண்டாடுகிறார்கள். தங்களுடைய பிறந்த தினம் மட்டும் எங்களுக்குத் தெரியவில்லை. தங்கள் பள்ளிக்கூட 'சர்டிபிகேட்'களிலிருந்து பிறந்த தினத்தைக் கண்டு பிடிக்க முடியாதா?

நாயக்கர்:—அவருடைய 'சர்டிபிகேட்'கள் இப்போது எப்படிக் கிடைக்கும்?

நான்:—ராஜாஜி படித்த பெங்களூர் காலேஜுக்கு எழுதுகிறேன். அவர்கள் ஒருவேளை அனுப்பக்கூடும்.

ராஜாஜி:—அதெல்லாம் ஒன்றும் கிடைக்காது. நான் காலேஜில் படித்து எவ்வளவு வருஷங்கள் ஆயின? இப்போது அந்த 'ரிகார்டு' எங்கே கிடைக்கப் போகிறது?

நான்:—ஆக்டர் அனந்தாச்சாரியார் புஸ்தகத்தில் நீங்கள் பிறந்த வருஷம் மட்டும்



டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் ஞாபகார்த்தப் பரிசு நிதிக்காக பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினரால் "அந்தமான் கைதி" என்னும் நாடகம் 7—6—47-ல் ஸ்ரீ எஸ். ஏ. ஐயர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடிக்கப்பட்டது. ஸ்ரீ எஸ். ஏ. ஐயர் அவர்களுக்கு வலதுபுறத்தில் வீற்றிருப்பவர் தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன் அவர்கள்.

குறிப்பிட்டிருக்கிறது. தேதி, மாதம் இவைகளைக் காணவில்லை. எது எப்படியிருந்தாலும் சரி, ஒரு நல்ல நாள் வைத்து எங்கள் சங்கத்தில் உங்கள் பிறந்த தினத்தைச் சீக்கிரமே கொண்டாடப் போகிறோம். (அப்போது நான் தியாகராஜநகர் நாடகச் சங்கத்தின் காரியதரிசி.) தாங்கள் பிறந்த நட்சத்திரங்கூட ஞாபகம் இல்லையா?

ராஜாஜி:—ரொம்பப் பிடிவாதக்காரனாயிருக்கிறீரே? என் தமையனாரும் பெரியோர்களும் 'ராஜகோபாலன், ஸ்ரீராமன் பிறந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவன்' என்று சொல்லுவதுண்டு. அதாவது புனர்பூச நக்ஷத்திரம். (சிறிது நேரம் சிரித்து) அது ஒன்றுதான் எனக்கும் ஸ்ரீ ராமனுக்கும் உள்ள ஒற்றுமை!

* * *

எனக்கு இதைக் கேட்டதும் சந்தோஷமாக இருந்தது. மற்றொரு பக்கம் துக்கமாகவும் இருந்தது. ஸ்ரீ ராமனையும் அவருடைய காலத்தில் சிலர் நிந்தனை புரிந்தனர். ஆனால், அவர்தான் விஷ்ணுவின் அவதாரம் என்று உணரவில்லையா? அதுபோல் ராஜாஜியின் பிறந்த தினத்தைத் தமிழ் மக்கள் குதூகலமாகக் கொண்டாடும் தினமும் வரக்கூடும் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டேன்.

இன்று அந்த நாள் வந்து விட்டதாகக் காணப்படுகிறது. தமிழ்நாடு ராஜாஜியின் பெருமையை நன்கு உணர்ந்து விட்டது என்றே கருதுகிறேன். ஸ்ரீ ராமநவமியன்று ஸ்ரீ ராமர் ஜயந்தியை நாம் கொண்டாடும் போது ராஜாஜி ஜயந்தியையும் ஏன் சேர்த்துக் கொண்டாடக் கூடாது?

[ஆசிரியர் குறிப்பு:—இந்த நண்பர் பிடிவாதமாக முயன்று ராஜாஜியின் ஜன்ம நட்சத்திரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். மிக்க வந்தனம். இன்னும் யாராவது ஒருவர் ராஜாஜி பிறந்த மாதத்தையும் கண்டுபிடித்துச் சொன்னால் தமிழ் நாட்டிலுள்ள லட்சக் கணக்கான ராஜாஜி பக்தர்களின் நன்றிக்குப் பாத்திரமாவார்.]